B2 023



WITH COURAGE AND FAITH



# அண்ணாமலைக் கனடா வளாகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன்

இணைந்து நடத்தும் கல்வித் திட்டத்தின்

## பத்தாம் ஆண்டு நிறைவும் பட்டமளிப்பு விழாவும் - 2015



# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே



# உள்ளடக்கம்


1. உபவேந்தர் வாழ்த்துரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் — 1
2. முனைவர் இராசேந்திரன், முதன்மையர், நுண்கலைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் — 3
3. பெருமதிப்பிற்குரிய ராதிகா சிற்சபைஈசன் என். டி. பி. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் — 4
4. பெருமதிப்பிற்குரிய லோகன் கணபதி மார்க்கம் நகரசபை உறுப்பினர் — 5
5. பேராசிரியர் ரி. அருட்செல்வி தலைவர், நுண்கலைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் — 7
6. பேராசிரியர். இ. பாலசுந்தரம் தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைக் கனடா வளாகம் — 8
7. அறிக்கை, நிருவாகப் பொறுப்பாளர், அண்ணாமலைக் கனடா வளாகம் முனைவர். செல்வநாயகி ஸ்ரீதாஸ் — 10
8. வைத்தியக் கலாநிதி இலம்போதரன் இராமநாதன் அறிக்கை பிரதம விருந்தினர் — 11
9. நடராசர் தத்துவமும் வழிபாடும் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் — 14
10. தொல்காப்பியமும் தமிழரின் தொன்மை வரலாறும் பேராசிரியர். இ. பாலசுந்தரம் — 20
11. தென் தமிழகத் திருக்கோயில் கல்வெட்டுக்களில் காணப்படும் இசைக் குறிப்புக்கள், முனைவர். முத்துக்குமாரன் — 24
12. அவசர உலகில் எம் வாழ்க்கையை மேம்படுத்தும் யோகக்கலை சிவலிங்கம் ஜெயரஜீன், எம். எஸ்ஸி (யோகா) — 28
13. புலம் பெயர்ந்த நாடுகளில் எமது இசையும் இளைஞர்களும் சிவசம்பு ஸ்ரீதாஸ். — 31
14. பாலர் முதல் வளர்ந்தோர் வரை தமிழ்மொழித் திறன் விமலா பாலசுந்தரம், எம். ஏ — 34
15. யோகாவில் இரு துளிகள் யோகா அருள்சுப்பிரமணியம், எம். எஸ்ஸி. — 37
16. தமிழ் - ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், சமூகம் முனைவர். செல்வநாயகி ஸ்ரீதாஸ் — 39
17. விதை – சபா அருள்சுப்பிரமணியம், எம். ஏ. — 41
18. சைவத் தமிழ்ப் பண்பாட்டின் இன்றைய நிலையும் எதிர்காலமும் கலாவித்தகர் உமா சூரியகுமார், எம். ஏ. — 42
19. Tamil and English Learning A comparative overview Siva Sinniah — 44
20. Motivating Children to Learn Music Kalaimamani Dr. Subhashini Chandrasekaran — 48
21. இழப்பும் இருப்பும் பொன்னையா விவேகானந்தன், எம். ஏ. — 51

| | | |
|---|---|---|
| 22. | எங்கும் வளர்ப்போம் எம் தமிழை,<br>மீரா இராசையா, எம். ஏ. | 52 |
| 23. | அண்ணாமலைக் கனடா வளாகத்தில் என் அனுபவம்,<br>கார்த்திகா மகாதேவன், இளங்கலை, இறுதியாண்டு | 54 |
| 24. | வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்<br>புஸ்பா கிறிஸ்ரி, எம். ஏ. | 56 |
| 25. | My Journey as a Bharathanatyam Dance.<br>Nattiya Kalaimani Anisha Sivathas | 58 |
| 26. | உயர் தனிச் செம்மொழி எம் தமிழ்மொழி.<br>சாரதா குமாரசாமி, எம். ஏ. | 59 |
| 27. | Greatness of Dance.<br>Dr. Mrs. Uma Anand | 62 |
| 28. | இலக்கியத் திறனாய்வாளர்களின் தகுதிகள், திறனாய்வின் பயன்கள்<br>வாசுகி நகுலராஜா, எம். ஏ. | 63 |
| 29. | சான்றிதழ், பட்டயம் பெறும் மாணவர் பட்டியல் | 66 |
| 30. | பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர் சிலரது படங்கள் | 74 |

**Our Sincere thanks
to all the blessed souls
who made this Publication possible
with their financial support.**

- Shangar Manickam
- Gary Aanandasangary
- Sajanthan Shan
- Kavitha Ramanathan
- Arvixid K. Haran

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
**ANNAMALAI UNIVERSITY**
(State University-Accredited with 'A' Grade by NAAC)
ANNAMALAINAGAR - 608 002, CHIDAMBARAM, TAMIL NADU, INDIA

**Prof. S. Manian** M.Sc., Ph.D.,
Vice-Chancellor

Date : 10-09-2015

## MESSAGE

The Directorate of Distance Education of the Annamalai University collaborates with Annamalai Canada Inc. in providing instruction in the Tamil language and the traditional Tamil Arts, mainly for the benefit of the second and third generation children of Tamil immigrants in Canada. The Annamalai University, while sharing this desire to bring home all attributes of this ancient language fortified with rich literature unsurpassed, together with its contribution to the development of the Arts congratulates the Annamalai Canada Campus for reflecting the parent University's ideals and for its extra efforts at taking into its wings, Satellite Organizations and Institutions all over the Globe where such initiatives are extended by coordinating Examinations at all levels for candidates in various countries.

I consider it as a great privilege to send Greetings to the Annamalai Canada Campus on this occasion at which Testimonials are being awarded to Candidates who have been successful at various Examinations in the previous years.

While applauding the unique initiatives of the Canada Campus, I wish a successful Convocation Ceremony befitting all efforts of the Annamalai Canada Campus which leaves no stone unturned to propagate Tamil Language and Culture in the midst of alien cultures.



(Dr.S.MANIAN)


Annamalai University
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்



ANNAMALAI UNIVERSITY
OFFICE OF THE DEAN, FACULTY OF ARTS

Dr.R.Rajendran, Ph.D
Dean, Faculty of Arts
Dean i/c, Faculty of Fine Arts
Annamalai University
Annamalainagar – 608 002

[off] 04144 - 238248 Extn* 378
[off] 04144 - 238282 Extn* 378
Email : rajlakcdm@rediffmail.com
Mobile No: 94436 65952
Chidambaram, Tamilnadu State, India

Date: 25.08.2015

## Message

It is undeniably a great pleasure that the Canada Campus, Annamalai University is celebrating the 10$^{th}$ Graduation Ceremony. I am very pleased to join you in celebrating this wonderful occasion.

I take this opportunity to convey my rich tributes to Mrs.S.Sridas, an officer of the Canada Campus for her outstanding contribution in the field of Fine Arts. With her able leadership, I am sure this campus will continue to maintain its excellence with great distinction.

Congratulations, graduates, for finishing your studies successfully. All your hard work and determination has paid off. It is time to celebrate.

I am sure you will always remember the period you have spent in this campus as the happiest moments of your life.

May your graduation be the beginning of a bright future.

You have big dreams for yourself. May God bless you with courage and guts to thrive towards your dreams.

Best of luck in all your future endeavours.

(Dr.R.Rajendran)
Dean i/c, Faculty of Fine Arts





13 September 2015

## A Personal Message from Rathika Sitsabaiesan

Dear friends,

I would like to extend my warmest greetings the graduates of the Annamalai Canada Campus and everyone attending the 10th Anniversary Celebration tonight.

An affiliation to the Annamalai University of Chithamparam in Tamilnadu, S. India, for 10 years, the Annamalai Canada Campus has been offering quality education in Tamil language, culture and fine arts.

The classes you offer provide invaluable opportunities for people, especially the second and third generations of Tamil Canadians to learn the culture and remember their roots.

As a woman of Tamil heritage and the first elected Member of Parliament of Canada from the Tamil Community, I am extremely proud of my Tamil heritage and culture. I am truly grateful for the education the Annamalai Canada Campus has been providing and the hard work its staff and volunteers have put in.

I extend my sincere congratulations to all the graduates and I look forward to celebrating many years of success with the Annamalai Canada Campus.

Sincerely,

Rathika Sitsbaiesan
NDP Candidate
Scarborough North

MARKHAM



September 13, 2015

Logan Kanapathi
Councillor, Ward 7

# *GREETINGS FROM MARKHAM*

I am very pleased to extend my best wishes and congratulations to **Annamalai University Canada Campus** on their **10 th Anniversary Celebrations and Annual Convocation** on September 13, 2015.

Being only University in Canada to offer university education in South Asian Music, Dance and Languages, the Annamalai University Canada Campus provides unique opportunities for Canadian students of Tamil origin who wish to pursue higher studies in these fields directly from professors from Indias renowned University. Tamil and its various art forms have a lot to offer to the world and there is a huge vacuum when it comes to research in these fields. I am sure Annamalai University Canada Campus will be great place to inspire research and higher studies in Tamil.

This special event highlights key moments in the organizations past and the contribution that they have made to the society. It is important that we take a moment and appreciate the contribution and the successes of the campus in the past 10 years and the success of the graduating students. I commend you for these efforts and thank you for this initiative.

Congratulations on your achievements, and I am confident that through your acdemic programs, you will continue to inspire, encourage and contribute to the beautiful diversity of our country.

Best wishes,

**Logan Kanapathi**
Councillor- City of Markham

The Corporation of the Town of Markham · 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
Tel: 905.479.7748 · Fax: 905.479.7763 · e-mail: lkanapathi@markham.ca · www.markham.ca


Annamalai University





**Dr. T. Arutselvi M. Sc(Physics), M.A(Music)**
M.A
(Tamil), B.Ed., Ph.D. (Music)
Professor and Head
Department of Music
Faculty of Fine Arts
Annamalai University

# Musings on Music

It is said that time is the best healer. But it takes much time. Music is the instant and longtime healer of our ills. Music is an artifact of aesthetic comtemplation and enjoyment. The sound of Music permeated in all walks of our life. It exists in everyday lullaby, cultural events, religious rituals, well conceived concerts, sports and games and what not. Music initiates, ends every activity of human being. Every subject has its own signification system. That may, sometime, beyond our ken. But the signification system of music is universal. The music will mellow, heal us, comfort us, sustain us.

Music has a wide variety of functions. As Plato says: “Music is a moral law. It gives soul to the universe, wings to the mind, flight to the imagination, and charm and gaiety to life and to everything.” Music is the greatest achievement of human imagination. It seeks pleasure and peace, comfort and consolation, beyond the utmost bound of human thought. When words are inadequate to express our innermost feelings, music supplies the adequate sounds, tones, rhythm, melodies to express our innermost feelings. Music is the fine spirit of humanity. In music we have god's plenty. Music is a nutritious food of life. It will enrich our body and soul, mind and heart. Be ready to dine with all forms of music and with all our famous musicians and composers.



# வாழ்த்துச் செய்தி

## பேராசிரியர் இ. பாலசுந்தரம்

**தமிழ்த் துறைத் தலைவர், அண்ணாமலைக் கனடா வளாகம்.**

அண்ணாமலைக் கனடா வளாகம் தொடங்கி பத்து ஆண்டுகளில் நுண்கலைத்துறை மாணவரும், தமிழ்க் கல்வித்துறை மாணவரும் Diploma, B.A., M.A. Ph.D ஆகிய பட்டங்கள் பெற்று, கனேடிய நீரோட்டத்திற் சேர்ந்து தமது வாழ்க்கையை வளம்படுத்தி வரும் செய்தி மகிழ்ச்சி அளிக்கின்றது. கனடா வளாகத்தின் பத்தாவது ஆண்டு பட்டமளிப்பு விழா இன்று மிகச் சிறப்பாக நடைபெறும் இந்த நிகழ்வுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இவ்வாண்டு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வருகை தர முடியவில்லை.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிற் கனடாவிலே, தமிழ்மொழி. தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைப் பேணும் முயற்சிகள் மிகப் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்மொழியை இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ளும் வகையில் கனேடிய அரசு மட்டுமல்லாமல் பொது நிறுவனங்களும் பெரிதும் ஈடுபட்டுவருகின்றன. அதேபோன்று தமிழர் பண்பாட்டு வடிவங்களாகத் திகழும் பரதம், சங்கீதம், தமிழசைக் கருவிகள் முதலானவை பற்றிய பயில்நெறிகளிலே தம் பிள்ளைகள் ஈடுபடுவதில் பெற்றோர் மிகவும் அக்கறை கொண்டவர்களாக உள்ளனர்.

ஒன்ராறியோ மாகாணத்தில் நடனம், சங்கீதம், மிருதங்கம், வயலின் எனப் பல துறைகளிலும் மாணவர் ஆண்டுதோறும அரங்கேற்றம் செய்கின்றனர். இக்கலைகளைத் தனிப்பட்ட ஆசிரியர்களிடம் பயின்று அரங்கேற்றம் செய்த மாணவர் தாம் கற்ற கல்வியைப் பல்கலைக்கழகச் சான்றிதழாகப் பெறும் வாய்ப்பின்றி நீண்ட காலமாகக் காத்திருந்தனர். இம்மாணவர் நுண்கலைத்துறைகளிற் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பைத் தொடரும் வகையில், ஸ்காபரோவில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கனடா வளாகம் பரதம், சங்கீதம், வயலின், மிருதங்கம் ஆகிய துறைகளில் Graded Exams, Diploma, B.A., M.A. Ph.D முதலான பயிற்சிநெறிகளையும் தேர்வுகளையும் நடத்தி வருகின்றது. சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் கற்பிக்கும் நுண்கலைத்துறைப் பேராசிரியர்கள் கோடைகால விடுமுறையிற் கனடா வளாகத்திற்கு வருகைதந்து நுண்கலைத்துறைப் பயிற்சிகளை வழங்குகிவருகின்றனர். அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு பாராட்டுகின்றேன்.

தமிழ்மொழியிலே தம் அறிவைப் பெருக்கிச் சமூகத்திற்குப் பயன்படும் நோக்குடன் பல மாணவர் கனடா வளாகத்தில் B.A., M.A., Ph.D பட்டப் படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர். இன்று நடைபெறும் இப்பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் அனைத்துப் பட்டதாரிகளையும் வாழ்த்துவதோடு, இவ்வளாகம் மேலும் பல கற்கைநெறிகளோடு விரிவடைந்து இந்நாட்டில் வாழும் மக்களுக்குப் பயன்படும் வகையில் சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*பேராசிரியர் இ. பாலசுந்தரம்*
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*அண்ணாமலைக் கனடா வளாகம்.*
balasundarame@yahoo.com – *416 267 5255*
*செப்ரெம்பர் 13, 2015*







## நிர்வாகப் பொறுப்பாளர் அறிக்கை

அண்ணாமலைக் கனடா வளாகத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் என்னும் பதவியை நான் எனது விருப்பின் பெயரிலேயே ஏற்றேன். "உயர் இலட்சியத்தின் தோல்வி, தாழ்ந்த இலட்சியத்தின் வெற்றியை விட மேலானது" எனபதில் எனக்கு நம்பிக்கை அதிகம். நிர்வாகப் பொறுப்பாளர் என்னும் பதவியை நான் ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டேன். கடந்த காலங்களில், அண்ணாமலைக் கனடா வளாகத்தின் பொறுப்பாளராக இருந்தவர் சொந்தக் காரணங்களுக்காக ஆறுமாத கால விடுப்பில் செல்ல நேர்ந்தது. இந்த ஆறுமாத காலம் வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் அண்ணாமலைக் கனடா வளாகத்தின் செயற்பாடுகள் செயலிழந்திருந்தன.

சுயத்தைத் தொலைத்து விட்டுப் வந்த நாம் எமது வேர்களைத் தேடி அங்கலாய்க்கும் நிலையில் இருக்கிறோம். எமது எதிர்காலம் கேள்விக் குறியாகவே இருந்தது, இருக்கிறது. சிறு தீக்குச்சியைக் கூடப் பெரு நெருப்பாக்கும் இனத்தைதச் சேர்ந்தவர்கள் நாம். இருண்ட காலத்திலிருந்து எம்மை விடுவித்துக் கொள்வதற்காக எதையும் சாத்தியமாக்குவோம். புலத்தில் எமது வேர்களை ஊன்றுவதற்கு முயன்றோம், முயல்கிறோம். பெருமுயற்சியால், நாம் வெளி வரும் ஒவ்வொரு தருணமும் எமக்குச் சவாலாகவே, பின்னடைவை ஏற்படுத்துவதாகவே இருந்திருக்கிறது.

உயர்ந்த நோக்கம் கொண்ட இந்தத் தாபனத்தை உயர்த்துவதில் இராமருக்கு அணில் போன்றதொரு பங்கினை வகிக்கலாம் என்று தீர்மானித்தேன். 2015 ஆம் ஆண்டு, இன்று நாம் பத்து ஆண்டுகளை முடித்துக் கொள்கிறோம். ஏற்றமும் இறக்கமும் நிறைந்த இந்தப் பாதை எமக்கு அனுபவத்தையும் துணிவையும் அளித்திருக்கிறது.

- எதிர்வரும் ஆண்டில் அண்ணாமலைக் கனடா வளாகத்தில் கல்வி கற்க முன் வரும் மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய தடங்கல்களைக் குறைப்பதில் நாம் மிகவும் அவதானமாக இருப்போம்.
- மிக விரைவில் எமது புதிய இணையத்தளம் வெளிவரவிருக்கிறது.
- தொலைபேசி காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை மாணவர்கள் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கும்.
- பிரச்சனைகள் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

சோதனை நிறைந்த காலத்தில் இணைந்து செயலாற்றிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி. வணக்கம்.


**முனைவர். செல்வநாயகி ஸ்ரீதாஸ்**

*அண்ணாமலைக் கனடா வளாகம்.*

ssridas@annamalaicanada.com


செப்டெம்பர் 13, 2015



# MESSAGE FROM DR. R. LAMBOTHARAN MD

## FOUNDER DIRECTOR OF KNOWING OUR ROOTS
## FOUNDER DIRECTOR OF IMHO- CANADA
## FOUNDER DIRECTOR OF TORONTO TAMIL SANGAM

Annamalai University of Chidamparam has a distinct place in the History of Tamil. Tamil language and Tamil arts were patronized, protected and promoted by the Tamil kings, particularly Pandiyan kings from Sangam period. Whatever we celebrate in Tamil language and culture today including the status of classical language is the blessings of those great patrons. The currently accepted timeline of Sangam period of around 500 BCE to 300 CE is subject further debate and objective research. The first available history of Tamils by Tamil is the commentary of Iraiyanar akapporul. It came through the oral tradition for few hundred years before it got written down around 700 CE. It describes about the successive three Tamil sangams from pre-historic period spanned over 10,000 years over the vast land of Kumarik kandam. Even though the current geological, oceanic and archeological researches and evidence acknowledge the series of successive disappearance of vast land from Indian subcontinent, very little objective evidence is available todate. City of Pumbuhar was lost to the ocean in the in the latter days as was the city of Dwaraka from Gujarat . Mahavamsa of Sri Lanka also recorded some of the oceanic consumption of land in those days.

Dark period of three to four hundred years Sangam and the adjacent period was followed by patronization of Tamil by Choza kings. Bhakti movement in the history was first started off from Tamil land from the fifth century CE. Tamil took the shape of Sivaththamiz. It was further beautified by Vainava bhakti literature with the rise of well demarked Vaishnava tradition. Tamil culture swept through the whole India and beyond as a pan-Indian phenomena not directly as the language and art but as in the form of bhakti in the following centuries. Kamba Ramayana was written during this period. This spirit was maintained by the renaissance of Pandiyas in Madurai from 13th century CE. Then came another dark period starting with the Mogul invasion of Madurai and the fall of Pandiyan kingdom. Though the Pandiyan kings and kingdom was shrank and retreated to Thenkasi, they themselves continued to contribute and patronize Tamil not only as the kings but also as Tamil Scholars. Saiva siddhanta, praised by G.U. Pope as the choicest product of Dravidian intellect took its final shape during this period.

Even though the subsequent Nayakka rule of Tamil Land by Telungu Nayakka kings did not direcly contributed to Tamil language , it buffered against the attempted destruction by Mogul invasion from North. But Tamil music took its final shape as karnatic music and became the music of South India during this period. Sculpture and art were flourished during Nayakka rule with their temple contructions.

Now the emerging Saiva monasteries gave refuge to the neglected Tamil language. But these monasteries came under attack and their properties were confiscated by the riots waged by dominant politicized Brahmanism. Brahmanism which started its dominancy from the latter part of Choza rule from tenth century CE onwards took its final shape during Nayakka rule. Only few Saiva monasteries survived these cave demolishing riots. Among these Mutts Thiruvavaduthurai Adheenam has become the patron and refuge for Tamil language, arts and books. They attracted Tamil scholars from whole Tamil Nadu and appointed worthy scholars, recognized them as their Adheena vidwans and pundits, employed them as teachers in their Mutts and other parts of Tamil Nadu. Adheenams also attracted interested students from all over Tamil Nadu and supported their education through their scholars and by giving them free food, accommodation and support. In fact they were functioning like Universities during that period.

Eminent Tamil scholars T.P. Meeadchisundaram pillai and U.V. Swaminatha Iyer were appointed Vidwans of Thiruvavaduthurai Adheenam. The great saivaite Tamil scholar Arumuga Navalar of Jaffna was recognized and titled as Navalar before he was known to the Tamil world. He was honoured posthumously with the title of Sri la Sri

by the said Adheenam through a published work of Arumuga Navalar. None other than chief pontiff of the Saiva Mutt entitled to use the title until today. Navalar subsequently established schools, published books, educated

and formed many Tamil scholars both Sri Lanka and India. Arumuga Navalar was the inspiration for C.W. Thamodarampillai and U. V. Swaminatha Iyer. U. V. Swaminatha Iyer travelled village to village in Tamil Nadu, searched, collected and copied Tamil books which were in palm leaf manuscripts in their last stage of decay and loss. Almost all of our available classical Tamil literatures would have been lost without these pioneer's priceless dedication and work. We Tamils and our future generation are indebted for them.

With the arrival of Christian missionaries Tamil took a new shape. The first printed Tamil work come through them. They prompted the use of Tamil prose as the language of expression for the common people. Navalar, who translated the Bible in Tamil on their request is considered as the father of modern Tamil prose. Contributions and researches of Beski and Caldwell pushed the Tamil into critical analytic world. The prime motive of these foreigners is not the Tamil language or Tamil culture but the conversion of the local people to the Christianity. But their contributions opened the door for the modern research in Tamil which is called Tamilology today.

Their researches were not based on objective evidence or field work but on the subjective intellectual analysis and presumptions. Of course this was the accepted method of scholars of the days. P.T. Srinivasa Iyengar, whose English book of " History of Tamils" is no exception. Their untested views and opinions attacked and eroded the traditional roots and belief system of the Tamil language and culture. This together with Aryan invasion theory have contributed to the alienation of the Tamil language from its religious roots over the last 150 years. Their views are well formalized and propagated through the emerging of formal University education with its subsequent prosperous rewards for its certificates in the job market.

Tamil language, arts and culture were losing their grip from their own community. Need for the formal university education system for the Tamil language, arts, culture and religion by Tamils became the pressing need of the society. Late Hon'ble Dr. Rajah Sir Annamalai Chettiar of Chettinad emerged and came forward as a star of hope. He started the Annamalai University in Chidambaram first as a College for Tamil music in 1929. It grew and evolved as the Annamalai University over the eminent leadership of Annamalai Chettiar's son Padma Bhushan Dr. Rajah Sir Muthiah Chettiar who was the Pro-Chancellor from 1948 to 1984. The University campus, including the colleges, hostels, and playgrounds, occupies an area of about thousand acres He sedulously nurtured the growth and development of the University. The University has had the unique good fortune of having a succession of eminent Vice-Chancellors to guide its destinies. During the last eighty five years the University has grown rapidly and has consolidated its position as a unitary and residential University with forty-nine Departments of Study and over 3240 members on its teaching staff. Annamalainagar is already a busy and full-fledged University town, east of Chidambaram, the abode of Lord Nataraja.

Annamalai University brought the Tamil from the enclosure of Adheenams to the University level and disseminated to the common man. Annamalai university appointed Swami Vipulanandar of Batticoloa, Sri Lanka as the world first ever Tamil professor. Swami Vipulanandar research and contribution to the Tamil world is well known through his book "Yarl Nool". He was subsequently appointed as the professor of Tamil to the University of Ceylon. Annamalai University attracted, identified and actively recruited eminent and potential scholars in the field of language, arts, music, culture, religion, philosophy etc and patronized them. Tamil language, art and research started flourishing from Annamalai University. Multi volume writings of eminent scholars like T.V. Sathasiva pandarathar and Vellaivarananar based on field research and objective evidences prompted and commanded by Annamalai University permeated field of Tamil History. Unavailability of their work in English is still a huge vacuum in the field of Tamil research universally.

As the responsibility for the Tamil studies are now being shared by other universities in Tamil Nadu, and by the initiative actions of successive Dravidian governments of Tamil Nadu like the formation of Institute of Asian studies etc; Annamalai University now focus to serve for the Tamil Diaspora settled in western countries. Tamil language , Fine Arts and Tamil culture are the ways to preserve the identity of Tamils in these countries. For this purpose, the well known Annamalai University is now committed to disseminate Tamil language learning together with the Tamil Arts and culture, especially to the emerging Canadian Tamils of second and third generation who are eager to sustain their roots with a robust understanding of the Tamil culture. We are privileged and proud to have Annamalai University Canada Campus affiliated to the Annamalai University of Chidambaram, in Tamilnadu, South India. Canada campus is celebrating its 10th Anniversary while also holding the annual Convocation on Sunday, the 13th of September 2015.




Annamalai University
அண்ணாமலை

# நடராசர் தத்துவமும் வழிபாடும்

பேராசிரியர் முனைவர் பழ.முத்துவீரப்பன்
முன்னைத் துறைத்தலைவர், தமிழியல் துறை
புலமுதன்மையர், இந்திய மொழிப்புலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

'ஒன்றியிருந்து நினைமின்கள்' என்றார் அப்பர் பெருமான். உலகியலில் அலைபாய்ந்து ஒன்று விட்டு ஒன்று பற்றும் ஊசல் மனத்தை ஒன்றிலேயே பற்றச் செய்வதற்கு ஞானிகள் கண்ட நல்லுருவமே நடராசப் பெருமான் திருவுருவம். எல்லா அழகும் எல்லா நிறமும் எல்லா மணிகளும் ஒருங்கமைந்த அழகுத்தோற்றம். ஆடல்வல்லான் அழகுருவத்தில் கலையின் நிறைவை முழுமையாகத் தரிசிக்க முடியும்.

'சிற்பக் கலையின் சிகரமாக விளங்கும் நடராசர் உருவில் நாம் காண்பது வெறும் சிற்பக்கலை மட்டுமல்ல. இசைக்கலை, நாட்டியக் கலை, விஞ்ஞானக்கலை, மெய்ஞ்ஞானக் கலை அனைத்தையும் காணுகிறோம். ஆனாலும் அவர் திருவுருவத்தில் மிக்குத் தோன்றுவது 'நாட்டியக் கலையேயாம்' (ப. ஆடல்வல்லான், 1976) என்பர் முதுபெரும்புலவர் ச.தண்டபாணி தேசிகர்.

'நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கைதான் உலகம். இவற்றின் இயக்கத்திற்குக் காரணன் இறைவன். நடராசர் திருவுருவம் இதை நமக்கு உணர்த்தும் வண்ணம் அமைந்திருக்கிறது. (கையில் தீ, காலில் மண், தலையில் நீர், துடியில் காற்று, ஆடுமிடம் ஆகாயம் இவ்வாறு ஐம்பூதங்களும் தன் உருவில் ஒவ்வோர் உறுப்பில் விளங்கத் தான் அவைகள் எல்லாவற்றையும் கூட்டுவிக்கின்ற நுண்பொருளாய், நுண்ணிய ஆற்றலாய் அவைகளைப் படைத்து ஆட்டுவிக்கிறான் ஆடல்வல்லான்' என்று விளக்கியுள்ளார் ச.தண்டபாணி தேசிகர் (ப.9 ஆடல்வல்லான்) இந்தப் பிரபஞ்சத்தில் உபஅணுக்கள் இடைவிடாமல் ஆடிக் கொண்டிருக்கின்றன (cosmic dance) இந்த ஆட்டத்தின் ஆட்டத்தைத்தான் நடராசரின் நடனம் குறியீட்டு வடிவத்தில் உணர்த்துகிறது எனலாம்.

அருளாளர் வாக்கின் வண்ணம் ஆடல்வல்லானின் உருவ அமைப்பை ஒன்றியிருந்து சிந்திப்பவர்க்கு அனுபூதி ஞானம் கைகூடும். ஒவ்வொருவர் நெஞ்சிலும் நாடியிலும் உயிர்த்துடிப்பாய் விளங்கும் சுத்த சத்தி சிவமே நடராசர் ஆகும்.

## நடராசப் பெருமானின் ஆனந்த தாண்டவம்

சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் 108 என்று பரதசாஸ்திரம் கூறுகிறது. இவற்றுள் ஒன்பது தாண்டவங்களின் இலக்கணங்களைச் 'சிற்ப ரத்னம்' என்னும் நூல் குறிப்பிட்டுள்ளது. இவற்றுள் ஆனந்த தாண்டவம், சந்தீயா தாண்டவம், உமா தாண்டவம், கௌரி தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுரா தாண்டவம், சங்கார தாண்டவம் என்பன சிறப்பான ஏழு தாண்டவங்கள் என்பர். முற்கூறிய ஒன்பது தாண்டவங்களுடன் மகாசங்கர தாண்டவம் என்ற ஒன்றையும் சேர்த்துத் தாண்டவம் பத்து என்பர் சிலர். 'இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து எண்ணும்போது ஆகம பேதங்களாலும், புராண வரலாற்று மாறுபாட்டாலும் சிவயோகியின் சிந்தனை வேறுபாட்டாலும், சிற்பியின் சிந்தனைத்திறம் செய்திறம் இவற்றாலும் ஒரே வகையான நடனம் பலவகையாகக் காட்சி அளிக்கின்றன எனலாம் என்பர் அறிஞர் (ப.54, ஆடல்வல்லான்)

தாண்டவங்களுள் காளிகா தாண்டவம் படைத்தல் தொழிலைக் குறிப்பது. கௌரி தாண்டவம் காத்தல் தொழிலைக் குறிப்பது. சங்கார தாண்டவம் அழித்தல் தொழிலைக் குறிப்பது. திரிபுர தாண்டவம் மறைத்தல் தொழிலைக் குறிப்பது. அருளல் தொழிலைக் குறிப்பது ஊர்த்துவ தாண்டவம். ஐந்து தொழிலையும் ஒருங்கே குறிப்பது ஆனந்த தாண்டவம். இத்தாண்டவம் 108 தாண்டவங்களுள் முதன்மையானது. எல்லாக் கோயில்களிலும் காணப்படுவது. இத்திருவுருவம் நான்கு கை, மூன்று கண், பரந்த சடை, பொன்னிறம் உடையதாகும். இத்திருவுருவில் வலக்கை விரல்நுனி நெஞ்சுக்கு நேரே அமைந்திருக்கும். இட உள்ளங்கையில் (அ) நடுவிரல் நுனியில் (அ) நடுவிரல் நடுக்கணுவில் தீயகல் விளங்கும். வலப்புற மேல்கையில் உடுக்கை திகழும். வலப்புற முன்கை அபயமாகவும் அதன் மணிக்கட்டில் பாம்பு கங்கணமும் திகழும். இடக்கை குறுக்காக (கஜ ஹஸ்தமாக யானையின் தொங்கும் கையாக) விளங்கும். ஊன்றிய வலக்காலின் முழந்தாளுக்கும் தூக்கிய திருவடியாகிய இடக்காலின் முழந்தாளுக்கும் இடைவெளியும் உயரமும் 16 அங்குலம் இருக்கும். பின்புறம் சடைகள் பரந்து தொங்கும் அதில் பாம்புகள் சுழன்று கிடக்கும். தலையில் மகுடம் அணிசெய்யும். அதில் பாம்பு, கபாலம், ஊமத்தப்பூ இவை விளங்கும். மகுடத்தின் வலப்புறம் பிறையும் கழுத்தில் உருத்திராக்கமும் இடக்காதில் இலையும் பொலியும். கால்களில் கிங்கிணி மாலை ஒலிக்கும். முகத்தில் புன்சிரிப்பு தவழும். மார்பில் முப்புரி நூலும் இடையில் புலித்தோலாடையும் அணி செய்யும்.

வலக்கால் சிறிது மடிந்து முயலகன் மீது ஊன்றியிருக்கும். முயலகனுக்குக் கீழ் 16 அங்குலம் உள்ள பதும பீடம் அப்பீடத்தைப்போல் நான்கு மடங்கு அகலமுள்ள பிரபை வட்டவடிவமாகத் திகழும். பிரபை சூரிய மண்டலம் போல ஒளிவீசும். அருகில் சிவகாம சுந்தரியின் திருவுருவம் பொலியும். இதுவே ஆனந்த நடராசரின் அமைப்பாகும். சங்கப் பின் நூலான கலித்தொகையிலும் சங்க மருவிய கால இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் சிவனின் கூத்துகளாகப் பாண்டரங்கமும், கொடுங்கொட்டியும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனந்த தாண்டவம் குறித்த குறிப்பு அவற்றில் இல்லை. எனவே திரிபுர தாண்டவம் நீங்கிய ஏனைய தாண்டவங்கள் காலத்தாற் பிற்பட்டன என்பர் ஆய்வாளர் சிலர்.

கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப்படும் திருமூலர், சிவனின் பலவகை ஆடல்களைக் குறிப்பிட்டுள்ளார். அக்குறிப்புகளுள் தில்லைச் சிற்றம்பலம், ஆடல் வல்லான் குறித்த குறிப்புகளும் அடங்கும். எனவே திருமூலர் காலத்திற்கு முற்பட்ட திருவுருவம் ஆனந்த தாண்டவம் என்று கருதலாம்.

திருமூலர் சிவயோகப் பயிற்சியில் ஆறு ஆதாரங்களிலும் புருவ நடுவாகிய சிற்றம்பலத்திலும் விளங்கும் தாமரைகளில் 'சிவ' என்னும் ஒலியும் அதன் வடிவாகிய செவ்வொளியின் அசைவும் நீலவொளியின் நிலையுமே ஆனந்த தாண்டவம் என்று அகமார்க்கத்தில் தியான சொரூபமாகக் காண வேண்டும் என்கிறார். இவ்வாறு அகத்தில் தியான சொரூபமாகக் காண்பதைப் புறத்தில் கண்டு பழக அமைக்கப்பட்ட திருவுருவமே திருக்கூத்துத் தரிசனம் ஆகிய (முன்னர் விளக்கிய) நடராசர் திருவுருவம் ஆகும். திருக்கூத்துத் தரிசனம் என்ற தலைப்பில் திருக்கூத்தின் தத்துவத்தையும் திருஉருவ அமைப்பையும் விளக்கியுள்ளார் திருமூலர். அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தும் சிவனது திருமேனி. எங்கும் சிவசத்தி. எல்லாம் அவன் ஆடும் இடமாகிய சிதம்பரம். எங்கும் அவன் ஆட்டம். சுருங்கச் சொன்னால் எங்கும் சிவன் விளங்குவதால் எங்கெங்கும் தோன்றுவன அவன் நடனம் என்கிறார். இறைவன் ஆட, அவன் படைத்த ஏழு உலகங்கள், அவற்றில் உள்ள பொருள்கள், தத்துவங்கள் அனைத்தும் ஆடுகின்றன. அனைத்தும் ஆட அவன் ஆடுகிறான்.

நடராச தத்துவம்

சிதம்பரத்திலும் மதுரையிலும் திருநெல்வேலியிலும் குற்றாலத்திலும் திருவாலங்காட்டிலும் சிவன் ஆடுவது புறக்காட்சியாகத் தரிசனம் அளிப்பது. இறைவன் உயிரினிடமாக, மந்திர சொரூபியாக இருந்து அதாவது சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தாய் இருந்து ஆடுவது அகக் காட்சியாகத் தரிசிக்க வேண்டியது.

நடராசப் பெருமானுடைய திருவடி நகரம், வயிறு மகரம்; தோள் சிகரம்; முகம் வகரம்; முடி யகரம்; ஆணவம், மாயை, கன்மங்களோடு கூடி மயங்கிக் கிடக்கும் உயிர்களுக்கு இறைவன் திருடிவ நகரமாகிய திரோதான சக்தியாக இருந்து அவற்றைத் தன்னிடம் கூட்டுகிறது. மாயத்தைப் பார்த்தாயா என்று வயிற்றிலே மகரத்தைக் காட்டுகிறது. எங்கும் பரவியிருப்பது சிவமாகிய பரம்பொருள் என்பதை வீசி நின்றாடும் தோள்களாகிய சிகரத்தால் உணர்த்துகிறது. உபதேசம் வழங்கும் முறையில் வகரத்தைக் காட்டுகிறது. இவ்வாறு அனுபவம் முதிர்ந்த ஆன்மா முடியாக விளங்கும் என்பதை அவன் நடனம் உணர்த்துகிறது. திருவருட் பயன் என்னும் நூல் இதனை ஊன் நடனம் என்று குறிப்பிடும். இந்த அருள் அனுபவக் குறிப்போடு கும்பிடுபவர்கள் அடுத்து ஞானநடன அனுபவத்தைப் பெறலாம்.

உடுக்கையில் சிகரமும் வீசிய கரத்தில் வகரமும் அபயகரத்தில் யகரமும் அகலில் நகரமும் ஊன்றிய திருவடியில் மகரமும் ஆக ஓங்காரத் திருவாசியின் கீழ் நடனம் புரிகிறார் கூத்தப் பெருமான். இங்ஙனம் உணரும் உயிர்கள், மலம் மாயை கெட்டு சிவசக்திகளின் இடையில் நிலைத்த இன்பத்தில் வாழும். இக்கருத்துகளை,

'சேர்க்கும் அடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் - பார்க்கில் இறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் நகரமது தான்'

**'ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடல்இது
பெற்றார் பிறப்பற்றார் பின்'**

என்று திருவருட்பயன் வெண்பாக்கள் விளக்கியுள்ளன.

நடராசப் பெருமானின் திருக்கைகள் திசைகளை உணர்த்தும் குறிப்போடு அமைந்தவை. (நான்கு (அ) எட்டு (அ) பத்து) திருவடிகள் இரண்டும் இரண்டு ஆற்றல்களைக் கொண்டவை. ஊன்றிய திருவடி மறைப்பாற்றல் உடையது. தூக்கிய திருவடி அருளாற்றல் உடையது. உயிர்களை வினைப்பயன்களை அனுபவிக்கச் செய்து மலபரிபாகம், இருவினையொப்பு வருவிக்கச் செய்வது ஊன்றிய திருவடி. மலபரிபாகம் பெற்ற உயிர்களை அருளை ஏற்கத் தகுதி உடையவர்களாக்கிப் பேரின்பத்தில் இருத்துவது தூக்கிய திருவடி. திருமேனி அமைப்பில் தனிச் சிறப்புடையது ஒளிமுகம். அம்முகத்தில் விளங்கும் குனித்த புருவம் அடியார் விண்ணப்பங்களைக் கூர்ந்து நோக்கிக் கேட்பது. புன்முறுவலின் அழகு காண்பார் மனத்தைக் கொள்ளை கொள்வது. 'கொவ்வைச் செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்' என்பது அப்பரின் சித்திரம் இம்முறுவல் உயிர்களின் இருவினைகளைக் கெடுப்பது. அவனுடைய மூன்று கண்களும் சூரியன், சந்திரன், தீ ஆகிய முச்சுடர்களின் குறியீடாகும். பொருள் உணர்ச்சியையும் அறிவுணர்ச்சியையும் தருவது கண் ஆகிய ஒளிப்பொருள் ஆகும். ஞானத்தின் அடையாளம் சடைமுடி என்பதை 'நுண்சிகை ஞானமாம்' என்று குறிப்பிடும் திருமந்திரம் முதுபெரும் ஞானியாகிய இறைவனின் சடைமுடியை பனித்தசடை, செஞ்சடை என்றெல்லாம் திருமுறைகள் குறிப்பிட்டுள்ளன. பெருமானின் சடைமுடிகள் பதினாறு. அவரை வழிபடுகையில் அமைய வேண்டிய சோடச உபாசனைகளைக் குறிப்பன.

இறைவன் திருமுடியில் பிறை சூடியுள்ளான். கங்கையாற்றைத் தரித்துள்ளான். ஊமத்தம் பூ, எருக்கு, அறுகு, கபாலம் ஆகியவற்றை அணிந்துள்ளான். சந்திரனுக்குத் தக்கன் அளித்த சாபத்தை நீக்கி பிறைமதியாய்த் தன் திருவடி மீது வைத்த நிகழ்ச்சி, இறைவன் தன்னைச் சரண் அடைந்த உயிர்களின் வினைகெடுத்து உயர்வு அளிக்கும் குறிப்பை உணர்த்துகிறது. கணந்தோறும் பெருகும் கங்கையாற்றைத் தன் மயிர்க்கால் ஒன்றிக் கட்டி வைத்திருப்பது அவன் தன் அளவில் ஆற்றலை உணர்த்துகிறது. ஊமத்தம் பூ சூடியிருப்பது அவன் விருப்பு வெறுப்பற்ற தன்மை உடையவன் என்பதைக் காட்டுகிறது. எருக்கும் அறுகும் அணிந்திருப்பது அறிவின் விளக்கத்தையும் நுணுக்கத்தையும் குறிக்கிறது. கபாலம் அவன் என்னும் மங்கல சொரூபி என்பதைக் குறிக்கிறது. இறைவன் தன் பவளம் போன்ற திருமேனியில் திருநீற்றைத் தரித்துள்ளான். திருநீறு சாணத்திலிருந்து ஆக்கப்படுவது. சார்பால் கெடுக்கும் தன்மை உடையதாய், கரிதாய் இருக்கும் சாணம் தன்னைத் தீயால் சுடின் குற்றங்கள் நீங்கித் தூய வெண்ணீறு ஆகும். இவ்வாறே ஆன்மாக்களும் தம் குற்றம் கெடின் தூய பொருளாய் விளங்கும். இதனைப் பராசக்தியின் வடிவம் என்பர். 'பராவணமாவது நீறு' என்பது அப்பர் வாக்கு. தானும் தன்னைச் சார்ந்த பொருளும் அநாதி நித்தியமானவை என்பதை உணர்த்தவே இறைவன் திருநீற்றைத் தன்மேனியில் தரித்துள்ளான்.

இறைவன் திருச்செவிகள் பரநாதம் பரவும் பராகாச வடிவம் ஆனவை. இறைவன் உடுக்கையை ஒலித்துப் பரநாத ஒலியை வலச்செவியில் ஏற்கிறான். அகங்கார வடிவான உயிரின் அழிக்கும் ஒலியை இடச் செவியில் ஏற்கிறான். ஆணும் பெண்ணுமாக அமைந்த இவ்வுலகம் தன்னுருவம் என்பதை உணர்த்தும் வகையில் வலக்காதில் குழையும் இடக்காதில் தோடும் அணிந்துள்ளான். நஞ்சுண்டும் சாவாமல் இருக்கும் தன்மையால் தன் அருளாற்றலை விளக்கும் வகையில் நீலகண்டனாகத் தோற்றம் அளிக்கிறான்.

நான்கு திருக்கரங்களில் வலப் பின் கையில் இருக்கும் துடி அவன் படைத்தல் தொழிலை அறிவிக்கிறது. அதாவது ஓசையின் குறியீடான துடி ஓசையில் இருந்து பிரபஞ்சம் தோன்றியது என்பதை உணர்த்துகிறது. இடக் கையில் இருக்கும் தீ அவன் அழிக்கும் செயலை அறிவிக்கிறது. நெருப்பு அழிவின் குறியீடு. அபயம் அளிக்கும் வலப்புற முன் கை காத்தல் தொழிலைக் காட்டுகிறது. அதாவது அறத்தைப் பின்பற்றுபவர்களைத் தீமையிலிருந்தும் அஞ்ஞானத்தில் இருந்தும் காப்பாற்றுபவன் இறைவன் என்பதைக் குறிக்கிறது. இடக் கைகளுள் ஒன்று யானையின் துதிக்கை போல வளைந்து அம்மையின் பாகமான தூக்கிய திருவடியைச் சுட்டி நிற்கிறது. இத்திருவடி, பரிபக்குவம் அடைந்த ஆன்மாக்களுக்கு நீ அடையக் கூடிய இன்பமயமான இடம் இது என அருளலை அறிவிக்கும் குறிப்புடையது. மெல்லென ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலைக் குறிக்கிறது. 'தோற்றம் துடியதனில்' எனத் தொடங்கும் உண்மை விளக்கப் பாடல் (பா.35) இக்கருத்தை விளக்குவதாகும்.

இறைவன் திருமார்பில் குறுக்காக உந்திவரை தொங்கும் முப்புரிநூல் (பாம்பு) மூலாதாரத்திலிருந்து கிளர்ந்து எழும் குண்டலினியைக் குறிக்கிறது. இறைவன் அணிந்துள்ள அரைஞாணில் உள்ள 81 சங்கிலி வளையல்கள் 81

பிரணவமந்தீரங்களைக் குறிப்பன. அவர் அணிந்துள்ள எலும்பு மாலையில் 28 கபாலங்கள் உள்ளன. இவை 28 சதுர்யுகங்களைக் குறிப்பன.

காலில் அணிந்துள்ள கழல் அவன் பிறப்பறுப்பவன் என்பதன் குறியீடு. அதில் உள்ள 14 சலங்கைகள் 14 உலகங்களைக் குறிப்பன. முயலகன் ஆணவமலத்தின் அடையாளமாக உடல் நெரிந்து கிடப்பதன் குறியீடு. முயலகனைத் தீண்டியும் தீண்டாத நிலையில் இருக்கும் ஊன்றிய திருவடி ஒளி இருளில் தோயாது. அதன் வியாபகத்தை அடக்கி நிற்பதன் குறியீடு. தூக்கிய திருவடி முத்தியின்பத்தை அளிப்பதன் குறியீடு.

ஓங்காரமாகிய திருவாசியின் நடுவில் திருவைந்தெழுத்து வடிவாக விளங்குகிறான் கூத்தப் பெருமான். திருவாசியின் மேல் உள்ள 21 சுடர்கள் ஒளியின் குறியீடாக அமைந்துள்ளன. திருவாசி இல்லாத இறைவடிவத்தைத் தரிசிப்பது கூடாது.

## நால்வரின் வழிபாட்டு அனுபவங்கள்

கூத்தப் பெருமானை பின்தாழ் சடையனாக – பிறை அணிந்த பெம்மானாக – கருமான் உரி ஆடை அணிந்தவனாக – கறைக் கண்டனாக - கங்கையைத் தலையில் தரித்தவனாக நெய், பால், தயிர் முதலியவற்றால் திருமுழுக்காட்டு ஆடப்பெறுபவனாக – பணைத் தோளியுடன் ஆடலை வேண்டியவனாகக் கண்டு காட்டியுள்ளார் சம்பந்தர். 'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்' என இறைவன் தூக்கிய திருவடியை நோக்கி நாளும் வழிபட வேண்டும் என்று பலபாடல்களில் வழிகாட்டுகிறார்.

கூத்தப் பெருமானின் குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிழ் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போன்ற மேனியில் பால் வெண்ணீறு எடுத்த பொற்பாதம் இவற்றைக் கண்டு அனுபவித்தவர் நாவரசர். பெருமானின் அபயகரம் எப்போதோ வர வேண்டிய நீ இப்போது வந்திருக்கிறாயே என்று கேட்பது போல 'என்று வந்தாய்' என்று கேட்பதாகப் பாடுகிறார் இவர். கூத்தப்பெருமானுடைய கச்சின் அழகு, உடுத்த துகில், கண்டத்திலங்கும் ஏனத்து எயிறு, சிரித்த முகம், நெற்றிக்கண், தலையில் உள்ள ஊமத்த மலர், விரல்கள் என்று உடல் உறுப்புகளையும் அணிகளையும் அழகுணர்ச்சியோடு கண்டு களிப்பதே பிறவிப்பேறு என்கிறார். தன் நெஞ்சில் குடிகொண்ட கூத்தனின் தோற்றச் சிறப்பை 'முடி கொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்' என்ற பாடலில் ஓவியப்படுத்தியுள்ளார். சென்று தொழுமின்கள் ஒன்றி இருந்து நினைமின்கள் என்று வழிகாட்டுகிறார் அப்பர் பெருமான்.

திருக்கரங்களில் துடியும் நெருப்பும் பாம்பும் பிடித்து ஆட்டமிடும் புலியூர்ச் சிற்றம்பலப் பெருமான், தன்னைத் தொழுபவரை கூற்றுவன் ஏவலர் முற்பிறவிப் பாவத்திற்காகத் தண்டிக்க முற்படும்போது தடுத்தாட் கொள்வான் என்று குறிப்பிட்டுள்ளார் சுந்தரர்.

தில்லைக் கூத்தன் உணர்வாய், ஒளியாய், சுவையாய் இருக்கும் அனுபவ நிலைகளைப் பலவாறு விவரித்துள்ளார் மணிவாசகர். இறையடியார் பலரின் வழிபாட்டு நிலைகளை, சிரிப்பார், களிப்பார், தேனிப்பார், திரண்டு திரண்டு உன் திருவார்த்தை விரிப்பார், கேட்பார், மெச்சுவார் வெவ்வேறு இருந்துன் திருநாமம் தரிப்பார்' என்று விவரித்துள்ளார் மணிவாசகர்.

'சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகனார்' என்று போற்றியுள்ளார். உரைகடந்த ஒன்று, சொல்ல முடியாத சுகம் என்று தான் பெற்ற இறை அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## வழிபடும் நெறிகள்

அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும் இறைவனைத் தொழ வேண்டும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நெக்கு நெக்கு உருகி உருகித் தொழுவது என்பது தொழுவதன் முதிர் நிலையாகும். திருமுறைகள் தொழுவது குறித்து விவரிப்பதை.

நாடகத்தால் தொழுதல், தொழக்கண்டு தொழுதல், சென்று தொழுதல், நின்று தொழுதல், நினைந்து தொழுதல், இருந்து தொழுதல், கிடந்து தொழுதல், எழுந்து தொழுதல், ஒன்றித் தொழுதல்

என்றெல்லாம் வகைப்படுத்தலாம்.

'நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து' (மணிவாசகர்)

'ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தால் உனை நானும் தொழுவனே (நாவரசர் (5:91:3)

செழுவார் கழல் தில்லை சிற்றம்பலவரைச்
சென்று நின்று தொழுவார் வினைநிற்கிலே (மணிவாசகர் கோவை பா.142)

நின்று நினைந்து இருந்து கிடந்து
எழுந்து தொழும் தொழும்பனேன்

என்று தொழுவதன் படி நிலையைச் சுட்டுவர் அருளாளர்.

ஒன்றி இருந்து நினைமின்கள்

உந்தமக்கு ஊனமில்லை

என்று உறுதி அளிப்பர் நாவரசர் (பா.4939)

வாய்த்தது நமக்கு ஈதோர் பிறவி. இப்பிறவியில் ஒன்றித் தொழும் பேறு கிட்டி விட்டால் பிறவிப் பயன் கிடைப்பது உறுதி.

ஒன்றித் தொழுவோம்

உத்தமனைப் பெறுவோம்

VIDHYA-BAVAA NATIAALAYAM
* Bharatanatyam Dance Lessons Practical & Theory
* Choreography for Dance Shows & Programs
Brampton (Hwy 50 & Clarkway Drive),
Vaughan (Hwy 27 & Major Mackenzie),
Scarborough (Markham & Ellesmere)
Guru: "Natiya Ilankalaimani"
Nivethika Nagularajah
BA. Arch - Ryerson University
B.Dance - Annamalai University Canada
416 -624 -9983






Annamalai University

# தொல்காப்பியமும் தமிழரின் தொன்மை வரலாறும்

பேராசிரியர் இ. பாலசுந்தரம்.
தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைக் கனடா வளாகம்.

தொல்காப்பியம் தமிழர் பண்பாட்டிற் காலத்தால் முந்தித் தோன்றிய இலக்கண நூலாக எமக்குக் கிடைத்துள்ளது. பேராசிரியர் வ. சுப. மாணிக்கனார் "தொல்காப்பியம் தமிழரின் உயிர் நூல்" என்பார். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாகவும், ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகவும் அமைந்து, 1602 சூத்திரங்களில் ஆக்கம் பெற்றுள்ளது. முதலிரு அதிகாரங்களும் தமிழ்மொழியின் இலக்கண இயல்பை வரையறை செய்து விளக்குகின்றன. பொருளதிகாரம் பண்டைத் தமிழரின் அகம், புறம் சார்ந்த முழுமையான வாழ்க்கை முறைகளையும், அவற்றைப் பாடும் செய்யுட்களின சிறப்பியல்புகளையும் முழுமையாக விளக்குகின்றது. அத்துடன் பண்டைத் தமிழரின் மொழி, வாழ்வியல், பண்பாட்டுக் கூறுகள் என்பனவற்றுக்கு இலக்கணம் கூறும் முழுமையான சமூகச் சிந்தனையுள்ள சமூகவியல் நூலாகவும் தொல்காப்பியம் அமைந்துள்ளது.

தமிழகத்தில் வடமொழியும் ஆரியர் பண்பாடும் தொல்காப்பியர் காலத்திற் சிறிது சிறிதாக இடம்பெறத் தொடங்கியதால், தமிழின் தனித் தன்மையையும், அதன் இலக்கணத்தையும் வகுத்துக் கூறும்வகையில், தமிழர் வாழ்வியலுக்குமுரிய இலக்கணமாகத் தொல்காப்பியம் இயற்றப்படுவதாயிற்று. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் எழுதிய பழைய உரைகள் கிடைத்துள்ளதோடு, இருபதாம் நூற்றாண்டிலும் பலர் உரை எழுதியுள்ளனர். இவ்வுரைகளின் மூலம் தொல்காப்பியம் பெருவழக்குப் பெற்று வருவதாயிற்று.

தொல்காப்பியம் எப்போது எழுதப்பட்டது என்பது இற்றைவரை ஆய்வுப் பொருளாகவே உள்ளது. பனம்பாரனாரின் பாயிரத்துடன் அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேறிய தொல்காப்பியம், இடைச்சங்கம், கடைச்சங்கம் நிலவிய காலங்களில் இலக்கண நூலாக வழங்கிற்று. தொல்காப்பியருக்கு முன்னரே இலக்கண ஆசிரியர் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதற்குத் தொல்காப்பியமே சான்று. முதல் இலக்கண நூல் எனக் கருதப்பட்ட அகத்தியம் அழிந்த நிலையிலே தொல்காப்பியம் தோன்றிற்று. தமிழர் சமூகத்தின் வாழ்வியல் நடைமுறைகளைத் தொகுத்துக் கூறும்வகையிலே தொல்காப்பியம் தமிழியல் ஆய்வுக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. வடக்கே வடவேங்கடமும், தெற்கே குமரியாறும் நிலைபெற்றிருந்த காலத்திலே தொல்காப்பியர் வாழ்ந்தார் என்றும், குமரி ஆற்றுக்குத் தெற்கே அமைந்திருந்த குறும்பனைநாடுகளிலே தமிழ் திரிந்த மொழி வழங்கிற்றென்றும், குமரியாறு கடற்கோளால் அள்ளுண்டு செல்வதற்கு முன்பாகவே தொல்காப்பியம் எழுதப்பட்டது என்றும் உரையாசிரியர் கூறுவர்.

தொல்காப்பியத்தை வடமொழி இலக்கண நூல்களுடனும், அகத்தியரோடும் தொடர்புபடுத்தும் கதைகள் தொன்மங்கள் மட்டுமன்றித், தொல்காப்பியர் காலத்தைப் பின்தள்ளுவதற்கு வடமொழிச் சார்பாளர் மேற்கொண்ட முயற்சி என்றும் க. வெள்ளைவாரணர் குறிப்பிடுவர் (2008). தொல்காப்பியர் வடமொழியாளர் என்று நிறுவுவதிலும் வடமொழிப் பற்றாளர் கருத்தாக இருந்துவந்துள்ளனர். நச்சினார்க்கினியர் சிறப்புப்பாயிரவுரையிலே, தொல்காப்பியனார் அகத்திய முனிவரால் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு அழைத்துக் கொண்டுவரப்பட்டவர் என்னுங் கட்டுக்கதையினை எழுதினார். மேலும் தொல்காப்பியரை வடநாட்டுச் சமதக்கினியின் புதல்வரென்றும், அவர் திரணதூமாக்கினி என்னும் இயற்பெயருடையர் என்றும் குறிப்பிட்டுள்ளமை தொன்மக்கதை ஆகும். காப்பியன் என்பது பழந்தமிழ்க் குடிப்பெயர். ஆனால் வடமொழிச் சார்பாளர் 'காப்பியன்' என்பது வடமொழிக் காவ்ய கோத்திரத்திலிருந்து பிறந்த வடசொல் என்பர். ஒரு காலக்கட்டத்திற் பல்கலைக்கழகங்களிலே தமிழ், வரலாறு ஆகிய துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் திட்டமிட்டே பழந்தமிழ் இலக்கியங்களில் ஆரியப் பண்பாட்டின் சாயலை வலிந்து விளக்கம் எழுதி வந்தமையை அவர்களின் நூல்வழிக் காணலாம்.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியோர் தாம் சார்ந்த மதக் கருத்துக்களுக்கும் சமூகக் கோட்பாடுகளுக்கும் ஏற்ப உரைசெய்தனர். குறிப்பாக நச்சினார்க்கினியர் ஆரியரது கோட்பாடுகளைத் தமிழ் மரபோடு கலந்து உரைசெய்தமை தமிழர் பண்பாடு கூறும் தொல்காப்பியத்தின் சிறப்பைச் சிதைப்பதாகவுள்ளது. தொல்காப்பியர் ஓர் அறிவர்; சாதி மத உணர்வுகளுக்கு ஆட்படாதவர். ஆனால், ஆரியச் சார்பாளர் தம் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் விளக்கும் வகையிலான சூத்திரங்களை யாத்துத் தொல்காப்பியத்திற் சேர்த்துக் கொண்டதோடு, தொல்காப்பியரும் வடமொழியாளர் என்றும், வடநாட்டுக் குலத்தவர் என்றும் நிறுவுவதிற் பெரும் முயற்சியெடுத்து வந்துள்ளனர்.

முதற் சங்க ஆவணங்கள் கடற்கோளால் அழிந்தமையால், இடைச்சங்க காலத்தில் எழுச்சிபெற்ற தமிழ்மொழி

வழக்கை செம்மையுறச் செய்யும் வகையில் பலர் இலக்கண நூல்கள் இயற்றினர். அந்த இலக்கண நூல்களை நன்கு கற்றறிந்த தொல்காப்பியர் மொழியின் வளர்ச்சி, மக்களின் வாழ்க்கைமுறை, கலை வளர்ச்சி, இலக்கியச் செல்நெறி என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, உலக வழக்கினையும் செய்யுள் வழக்கினையும் அடிப்படையாக வைத்து, தமிழ்மொழிக்கு முழுமையான இலக்கணம் செய்தார்.

தொல்காப்பியர் காலம் கி.மு. 700 க்கு முற்பட்டது என்பதில் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், சி. இலக்குவனார் முதலியோர் ஒத்த கருத்துடையர். தொல்காப்பியர் காலம் பற்றிய ஆராய்ச்சியானது, தமிழர் வரலாறு பற்றிய ஆய்வுடன் தொடர்புடையதாதலால், மொழிவல்லுநர், இலக்கிய வரலாற்று ஆய்வாளர், வரலாற்றாசிரியர், புதைபொருளாய்வாளர் அனைவரும் ஒன்றிணைந்து இப்பணியை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

காலத்தாற் பழையனவாகக் கிடைத்துள்ள எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டவையாகும். "இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் உரைத்தல்" என்பது மரபு. அவ்வகையிற் சங்க இலக்கிய காலம் கி.மு. 700 க்கு முற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளுவதில் எவ்வித தடையுமில்லை. தொல்காப்பியர் காலம் பற்றி ஆராய்ந்தோர் தமிழர் பண்பாட்டு வரலாற்றுக் காலத்தையும் சங்க காலம், தொல்காப்பியர் காலம் என்பவற்றையும் பின்தள்ளுவதில் மிக்க அக்கறை காட்டியுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

பேராசிரியர் அ. இராமசாமி (2012) தொல்காப்பியம் இரண்டாம் தமிழ்ச் சங்க காலத்திலே (கி.மு.15,000) தோன்றியதாகக் குறிப்பிடுவர். பேராசிரியர் கே. நெடுஞ்செழியன், வேதத்திலுள்ள தொல்காப்பியச் செல்வாக்கை நிறுவி, தொல்காப்பியம் வேத காலத்திற்கும் முந்தியது எனவும், சிந்துவெளி நாகரிகத்திலும் தொல்காப்பியத்திலும் இடம்பெறும் தெய்வங்களை ஆராய்ந்து சிந்துவெளி நாகரிகத்தின் இறுதிக் காலக்கட்டத்தில் (கி.மு.15,00) தொல்காப்பியம் தோன்றிற்று எனவும் அவர் கூறுவர். தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் ஒப்பிட்டு ஆய்வு செய்த பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தொல்காப்பியம் சங்க காலத்திற்கு முற்பட்டது என்பர். டாக்டர் சி. இலக்குவனார். கா. சுப்பிரமணியபிள்ளை, கு. வெ. பாலசுப்பிரமணியன் ஆகியோர் தொல்காப்பியர் காலத்தைக் கி.மு. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என நிறுவினர். இவர்களுக்கு மேலாக பேராசிரியர் க. வெள்ளைவாரணனார், கி. மு. 5320இல் தொல்காப்பியம் தோன்றிற்று எனவும், மறைமலையடிகள் கி.மு. 3500இல் தொல்காப்பியம் தோன்றியது எனவும் கூறுவர். டாக்டர் மா. இராசமாணிக்கனார் கி.மு. 400 ஆண்டு என்பர். இவ்வாறாக ஆய்வாளராற் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், தொல்காப்பியம் கூறும் எழுத்து, சொல், பொருள் இலக்கண விதிகளையும், தொல்காப்பிப் பொருளமைதியையும், மொழியியல், மொழிவரலாறு, பண்பாட்டு வரலாறு முதலிய ஆய்வுத்துறைகளின் மூலம் ஒப்பிட்டு ஆழ்ந்து நோக்கும்போது தொல்காப்பியர் காலம் கி.மு. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என உறுதியாகக் கூறலாம்.

தொல்காப்பியர் தனது காலத்திற்கு முன்னர் வழங்கிய இலக்கியங்களை நன்கறிந்தே இலக்கணம் படைத்தார். தொல்காப்பியர் அகத்துறைப் பாடல்கள் கலி, பரிபாட்டு என்ற யாப்பில் இயற்றப்படும் என்றார். ஆனால் சங்ககால அகத்திணைப் பாடல்களிற் பெரும்பாலனவை அகவல், கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய யாப்பிற் பாடப்பட்டுள்ளன. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களுக்குக் கூறிய இலக்கண விதிகள் சங்கச் செய்யுள்களோடு முரண்படுவதோடு, அவ்வாறு முரண்படும் சொற்கள் வடசொற்களாகவும் உள்ளன. சங்கச் செய்யுட்களின் மொழிநடைக்கும் தொல்காப்பியர் கூறும் சில இலக்கண விதிகளுக்கும் சில முரண்பாடுகள் காணப்படுவதற்குக் கால இடைவெளியும் ஆரியப் பண்பாட்டு ஊடுருவலும் காரணங்களாகும்.

ஒரு காலத்தில் வழக்கிலிருந்த சொற்கள் பிற்பட்ட காலத்தில் வழக்கொழிந்துபோக, அவற்றுக்குப் பதிலாக புதுப்புதுச் சொற்கள் வழக்கில் தோன்றுதல் இயல்பே. அவ்வகையிலே தொல்காப்பியர் காலத்தில் வழக்கிலிருந்த 'அதோழி', 'இதோழி', 'உதோழி', 'எவன்தோழி' முதலான சொற்கள் சங்கச் செய்யுள்களில் இடம்பெற்றில. மொழியின் அமைப்பை எடுத்துக் கூறுவது இலக்கணம்; மக்கள் வாழ்க்கை நெறியை முறைப்படக்கூறி, நெறிப்படுத்திக் காட்டுவது இலக்கியம். சிலர் இலக்கியம், இலக்கணம் என்னும் சொற்கள் வடமொழி எனக் கூறுவராயினும், இவை தமிழ்ச் சொற்களேயாம். இவற்றைக் குறிக்க வடமொழியில் சாகித்தியம், வியாகரணம் என்னும் சொற்கள் உள்ளமை காண்க.

தொல்காப்பியம் பொருளதிகாரத்திலே தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத பொருள் கூறும் சூத்திரங்கள் இடைச் செருகலாக உள்ளன. தொல்காப்பியத்தில் ஆரியரது எண்வகைத் திருமணமுறைகள் குறித்துக் கூறியிருத்தல்

வியப்பாகின்றது. தமிழரது திருமண மரபில் அன்பின் வழியில் காதல்வழிப்பட்ட திருமண வழக்காறுகளே பின்பற்றப்பட்டன. ஆனால் தொல்காப்பியம் கூறும் எண்வகைத் திருமணம், மேலோர் கீழோர் என்ற சமூகப் பாகுபாடு, காதல் மற்றும் குடும்ப வாழ்க்கையிற் பிராமணரின் செயற்பாடுகள் குறித்த சூத்திரங்களும் இடைச்செருகல்களேயாகும்.

மொழி என்பது ஒலி வழிப்பட்டதாகும். எனவே முதலில் மொழிக்கு அடிப்படையான ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்களுக்குத் தனியாக ஓர் அதிகாரம் வகுத்துத் தொல்காப்பியர் எழுத்திலக்கணம் கூறினார். அதில் எழுத்தொலி, வரி வடிவம் என்பனவற்றுக்கு நன்கு விளக்கம் தந்துள்ளார். தொல்காப்பியர் மிக நுட்பமாக எழுத்தொலிகள் பிறக்கும் முறையை, "உந்தி முதலா முந்துவளி தோன்றித் தலையினும் மிடற்றினும்..." என்ற சூத்திரத்திற் கூறியுள்ளார். தொல்காப்பியர் சில எழுத்துக்களுக்கு மட்டுமே வரிவடிவம் பற்றிக் குறிப்பிடுவதால், ஏனைய எழுத்துக்கள் மக்களிடையே நன்கு பயன்பாட்டிலிருந்தமை உணரப்படுகிறது. உலக மொழிகள் அனைத்திலும் அவற்றின் உச்சரிப்புப் பற்றிய நுணுக்கமான வரையறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆங்கிலத்தில் B H X Z ஆகிய எழுத்தொலிகள் மிகவும் நுணுக்கமாக உச்சரிக்கப்படுகின்றன. அதுபோன்றே தமிழில் ண ந ன ல ழ ள ற என்ற எழுத்துக்கள் மிகவும் நுணுக்கமான உச்சரிப்புடையவை. தொல்காப்பியர் மிக நுட்பமான வகையில் எழுத்தொலிகள் பிறக்கும் முறையை கி.மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே கூறிவைத்திருப்பது என்பது, பண்டைத் தமிழரின் மொழியறிவின் திறத்தையும் தமிழர் பண்பாட்டின் மேம்பாட்டையும் வெளிப்படுத்துவதாகும்.

சொற்கள் மொழியிலே தனித்தும் தொடர்மொழியாகவும் அமையும் பாங்கினைச் சொல்லதிகாரம் விளக்குகிறது. மொழியின் ஆற்றல் எழுத்து வழக்கில் மட்டுமன்றி, பேச்சு வழக்கிலும் தங்கியுள்ளது. பேச்சு வழக்கில் சொற்கள் எவ்வாறு பயன்படுன்றன என்பதை மிக நுட்பமாக அவதானித்து, அவற்றின் இலக்கண மரபுகளையும் தொல்காப்பியர் பதிவுசெய்துள்ளார். சான்றாகப் பேச்சு வழக்கில் பன்மைச் சொல்லை ஒருமையில் வழங்குதல் இயல்பாகும். கண், காது, கால், கை முதலிய உடலுறுப்புக்கள் ஒருமையில் பேச்சுவழக்கில் வழங்குவது வழக்கம் என்பதால், தொல்காப்பியர் அதற்குச் சிறப்பு இலக்கண விதி கூறினார். ''இல்லை என்ற சொல்லை இல்லை ஆக்குவோம்'' என்பது கவிதை. அம்மரபு தொல்காப்பியர் காலத்திலும் இருந்திருக்கிறது.

தொல்காப்பியர், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைச் சொற்களைக் குறிப்பிடுவர். செந்தமிழ் நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் பேசியமொழி செந்தமிழ் என்றார். ஆனால் அவர் செந்தமிழ் நாட்டின் எல்லைகள் பற்றிக் கூறவில்லை. ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களும், பல பொருளை உணர்த்தும் ஒரு சொல்லும் திரிசொல் என்றார். பொங்கர்நாடு, ஒளிநாடு முதலிய பன்னிரு நாடுகளில் வழங்கிய தமிழ்ச் சொற்களைத் திசைச்சொற்கள் என உரைகாரர் கூறுவர். வடசொல் என்பது வடமொழிக்குரிய சிறப்பு எழுத்துக்கள் இல்லாமலே தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவான எழுத்துக்களால் தற்சமம், தற்பவம் என ஆக்கம் பெற்று வழங்குவதாகும். அடுத்து, வடசொற்களைத் தமிழில் வழங்கும்போது வடமொழிக்குரிய எழுத்துக்களைத் தவிர்த்து, அவற்றுக்கு ஒலிப்பொருத்தமுடைய தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்த வேண்டுமென்றார் (தொல்.401). எ-டு: கண்டம், கங்கை, கடம் என்ற மூன்று வடமொழிச் சொற்களதும், முதல் எழுத்துக்கள் வடமொழிக்கே சிறப்பாக உரிய க வர்க்க (kha, ga, gha) எழுத்துக்களால் ஆனவை. ஆனால் தொல்காப்பியர் வடமொழிச் சிறப்பு எழுத்துக்கள் 12 க்குப் பதிலாக அவ்வொலிகளுக்கு நிகரான தமிழ் எழுத்தைப் பயன்படுத்துமாறு குறிப்பிடுவர்.

முதலிரு சங்க காலங்களிலே தமிழ்மொழியானது, தனித்தமிழ் வழக்கு உடையதாக இருந்திருக்க வேண்டும். நாகரிக வளர்ச்சியுடைய மக்கள் தன்னாட்டு எல்லைக்கு உட்பட்டவர்களாக வாழ்தல் இல்லை. அவர்கள் நாகரிக மக்கள் பலருடன் தொடர்புகொள்ளுதல் அவர்களது வாழ்க்கையின் தேவையாகிறது. பண்டை நாள் முதல் தனித்தமிழ்ச் சொற்களோடு நிலைபெற்றிருந்த தமிழ்மொழியிலே திசைச்சொற்களும் வடசொற்களும் காலப்போக்கில் வந்து வழங்குதல் காலத்தின் தேவையாயிற்று. தமிழ்மொழியில் ஏற்பட்ட மொழிக் கலப்பினை நன்கறிந்த தொல்காப்பியர் தமிழில் வழங்கும் சொற்களை நான்கு வகையாக வகுத்து இலக்கணம் கூறவேண்டிய தேவையை உணர்ந்திருந்தார் எனலாம்.

பண்டைத் தமிழ் மக்களின் பன்முகப்பட்ட வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கும் செய்யுட்கள் பாடப்பட்டுள்ள பொருள் மரபு, செய்யுள் மரபு, மற்றும் தமிழர் பண்பாட்டு மரபுகள் என்பனவற்றைத் தெளிவாகப் பொருளதிகாரம்

கூறுகின்றது. தொல்காப்பியர் மக்களது வாழ்க்கை முறையைக் காதல் திருமணம் குடும்ப வாழ்க்கை பொருளீட்டல் எனப் பல்வேறு நிலைகளாக வகுத்துக் கூறுவர். சங்கப் புலவர் மானுட அக ஒழுக்கங்களைப் பாடுவதற்குப் இயற்கைச் சூழல்களைக் களமாகக் கொண்டனர். காதல் வயப்பட்ட தலைவன், தலைவி, அவர்களுக்குத் துணையாகும் தோழன், தோழி, அவர்களை நெறிப்படுத்தும் செவிலித்தாய், நற்றாய், அறவோர், அந்தணர் முதலியோரைத் துணைப் பாத்திரங்களாகக் கொண்டு பாடப்பட்ட அகத்திணைச் செய்யுட்களுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். அகத்தமிணை இலக்கியம் முதல், கரு, உரி என்ற மூன்றின் வாய்ப்பாட்டு அடிப்படையிற் பாடப்பட்டிருப்பதைத் தொல்காப்பியர் உணர்ந்து, பழந்தமிழ் இலக்கிய வழியாகவும், முந்து நூல் இலக்கண வாயிலாகவும் தானறிந்த விடயங்களைத் தொகுத்து அகத்திணை இலக்கணத்தை வகுத்துள்ளார். பொருளதிகாரத்திற் பண்டைத் தமிழரின் நாடகக்லை, மெய்பாடுகள், இலக்கிய உவமை, உள்ளுறை, இறைச்சிப் பொருள், மற்றும் செய்யுள் இயற்றும் யாப்பிலக்கணம், நாட்டுப்புற இலக்கிய வகைகள் என்பனபற்றியும் விரிவாக இலக்கணம் கூறியுள்ளார். பொருளதிகாரத்தின் சிறப்பை பேராசிரியர் மு. வரதராசனார் (1996:63-64) வருமாறு குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது:

> "ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழிலக்கியம் பற்றி இந்த அளவிற்கு ஆராய்ந்து எழுதியுள்ளது போற்றத் தக்கதாக உள்ளது. மேலைநாட்டார் இலக்கிய ஆராய்ச்சிக்கு அரிஸ்டாட்டிலின் நூலை அடிப்படையாகவும் தொடக்கமாகவும் கொண்டு பயன்பெறுவது போல், தமிழறிஞர் தொல்காப்பியத்தின் இந்த மூன்றாம் பகுதியை ஆராய்ந்து பயன் பெறுகிறார்கள்".

தமிழர் தம் பழம்பெருமையையும், தமிழ்மொழிச் சிறப்பையும் தன்னகத்தே பதிவுசெய்து, தமிழரின் வரலாற்றுத் தொன்மையை நிலைநாட்டும் முழுமுதல் ஆவண நூலாகத் தொல்காப்பியம் விளங்குவதை நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். உலகின் பல நாடுகளிலுள்ள அறிஞராலே தொல்காப்பியத்தின் தொன்மையும் பெருமையும் உணரப்பட்டுள்ளது. தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகளும் விரிவடைந்த நிலையில் "அனைத்துலகத் தொல்காப்பியம் மன்றம்" தோற்றம் பெற்றுள்ளமை ஈண்டுச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

**************** ******************* *************************


வீடுகளை வாங்கவும் விற்கவும் இன்றே என்னை அழையுங்கள்




நீங்கள் என் மூலமாக வீடு வாங்கினாலோ விற்றாலோ

Legal Fee
Property Evaluation
Mortgage Counselling
இலவசம்

Flexible Commission

Varna Kanapathipillai B.Sc.(Eng)



416.844.7390
Email: vkanapat@yahoo.ca

PROPERTY MAX Realty Inc. Brokerage

Office: 416.291.3000
Fax: 416.321.0413
6888 14th Avenue E,
Markham, ON L6B 1A8

# தென் தமிழகத் திருக்கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் இசைக்குறிப்புகள்

**முனைவர். ந. முத்துக்குமரன்**

உதவிப் பேராசிரியர், இசைத்துறை, அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

காலமாற்றங்களில் முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றிய அரிய செய்திகள் பிற்கால சந்ததிகளுக்கு எட்டாது மறைந்துவிடக் கூடாது என்ற உயரிய நோக்கத்தில் அவற்றைக் கல்லிலும், செப்பேடுகளிலும் பொறித்து வைப்பது முற்கால மன்னர்களின் வழக்கமாக இருந்து வந்துள்ளன. அவைகளே இன்றளவும் சிறந்த வரலாற்றுச் சான்றுகளாக திகழ்கின்றன.

தமிழ் மன்னர்கள் பலர் தமது ஆட்சியில் நடந்த முக்கிய நிகழ்வுகளை, கோயில்களில் உள்ள கற்சுவர்கள், பாறைகள், செப்புத் தகடுகள் ஆகியவற்றில் பொறித்து வைத்துள்ளனர். ஆட்சி முறைகள், போர்ச் செய்திகள், சமயக் கருத்துக்கள், அறக்கோட்பாடுகள், வீரச் செயல்கள், கலைத் தன்மைகள், கொடைச் சிறப்புகள், போன்ற பல செய்திகள் கல்வெட்டுகள் வாயிலாக தெரியவருகின்றன. தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள் ஏராளமாக காணப்பட்டாலும் அந்த வகையில் தென் தமிழகத்தில் உள்ள ஒரு சில கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுச் செய்திகளை தொகுத்து வழங்குகிறேன்.

1. ஆச்சாள்புரம் (திருநல்லூர்ப் பெருமணம்)

தில்லைத்திருத்தலமான சிதம்பரத்தை அடுத்த ஆச்சாள்புரத்தில் 19 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் சோழர்கால கல்வெட்டு 15ம் , பாண்டியர் கால கல்வெட்டு —— 3ம் , தஞ்சை மாகாராஷ்டிர மன்னர்கள் கால கல்வெட்டு —— 1ம் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுக்களில் இத்தலத்தைப் பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்வூரானது வடகரை இராசாதி ராசவள நாட்டு வெண்ணியூர் நாட்டு பஞ்சவன்மாதேவியான குலோத்துங்க சோழ சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்தது (522-527-0கு18) என்றும் இறைவன் திருப்பெருமணமுடைய மகாதேவராவார், ஆளுடைய பிள்ளையார், சொக்கியார், ஸ்ரீகயிலாசமுடையார், "பண்படிக்க ஆடுவார்" முதலிய பல மூர்த்திகளின் நாமம் குறிப்பிடப்படுகின்றன. மேலும் இதில் நடராசப் பெருமானை "பண்படிக்க ஆடுவார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பண்படிக்க ஆடுவார் என்னும் "கூத்தப் பிரானார்க்கு"ப் புறக்குடி பிருதிகங்கரையன் என்பவரால் நிலம் விடப்பட்டது என்றும் மதுரையும் ஈழமும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்ட இவ்வரசற்கே யாண்டு 24 வது பண்படிக்க ஆடுவாரது வழிபாட்டிற்கும், யாத்ரீகர்களுக்கும் உணவளிக்கவும் நிலம் அளிக்கப்பட்டது. என்ற இவ்வரிய செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2 - சீர்காழி - இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள், 47 உள்ளன.

2-ம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டில் இவ் ஆலயத்தில் உள்ள சம்பந்தர் கோயிலில் நெடுநாளாக தேவாரத் திருமுறைகள், எழுதி வைக்கப்பட்டிருந்திருக்கிறது. அவற்றைப் பூசித்துக் கண்காணிக்க ஒரு தமிழ் விரகர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கடமை, திருமுறை ஏடுகள் பழுதடையாமல் பாதுகாத்துக் கொள்ளுதலும், பழுதடைந்தால் அவற்றை எழுதிப் புதுப்பிப்பதும், அவற்றைப் பூசிப்பதுமான கடைமைகள் ஆகும். இதற்காக அவருக்கு அவர் விருப்பப்படி நிலம் விடப்பட்ட செய்திகள் காணமுடிகிறது.

இக்கருத்தை குறிக்கும் கல்வெட்டு வாசகம்

"திரிபுவனச் சக்கரவர்த்திகள் : சீறி குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு.......ஆவது இராசராச வளநாட்டுத்

திருக்கழுமல நாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் கர்நாடக ஞாயிற்று முதல் கிராம காரியஞ் செய்கிற பெருமக்களோம். ஆளுடைய பிள்ளையார்த் திருமாளிகைத் தமிழ்விநகர் கண்டுஇக்கோயில் திருக்கைக் கோட்டியில் எழுந்தருளியிருக்கிற சுதீருமுறைகள் திருக்காப்பு நீக்கி..." என்று குறிப்புகள் காணப்படுகின்றது.

3 ___ திருவையாறு - திருவையாறு பஞ்சதீஸ்வரர் கோயில் கல்வெட்டு ஒன்றில்

"தமிழ்பாட ஒருவனுக்குப் பட்டாலகம் காமப் பேரரையனுக்கு பங்கு ஒன்றையும்" என்று பொறிக்கபப்பட்டுள்ளது.

தமிழ் ஆரியம் என்ற இருவகைப் பாடலும் ஆடலும் அக்காலத்தில் இருந்துள்ளது. "பாட்டாலகன் என்பவன் " தமிழ்ப்பாடல்களை பாடியிருப்பான் என பொருள்படுகிறது. அவனுக்கு ஒரு பங்கு அரச ஆணையால் ஒதுக்கப்பட்டுள்ளது. பேரரையன் என்பது சிறப்புப் பட்டமாக இருக்கவேண்டும். "காமரம்" என்பதை பண்ணிணைக் குறிக்கும் சொல்லாக அமைந்திருக்கலாம்.

காமரப் பண்ணின் இசைபாட வல்லவனாகப் பட்டாலகன் இருந்திருக்க வேண்டும் "காமரம்" ஒரு தமிழ்ப்பண், அதில் பாடுவதைத் "தமிழ் பாட" என்று கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கலாம். இசையை அரசன் மதித்து, விருதுகள், கொடைகள், வழங்கியிருப்பதை இதனால் அறியலாம்.

இக்கோயிலில் காணப்பெறும் மற்றொரு கல்வெட்டில்

"பக்கவாத்யர் அழகிய சோழத் தெருந்தவலந்தை வேளைக்காறரில் ஐயாறன் சுந்தரிக்குப் பங்கு முக்காலும்" என்பது கல்வெட்டுத் தொடர்

"ஐயாறன் சுந்தரி" என்பவர் பக்கவாத்திய ஆசிரியராக இருந்திருக்கலாம். "வலங்கைவேளை" என்பது ஒரு சிறப்பான விழா நேரத்தையோ அல்லது "வலங்கைமேளம் என்ற கருவியைக் குறிக்கிறதா என்பது ஆய்வுக்குறியது.

பக்கப்பாட்டுக்காரருக்கு வழங்கப்படுவதில் முக்கால் பங்கு ஆசிரியருக்கு உரியது என்ற கருத்தும் இதில் காணப்படுகிறது.

பெண்களும் காந்தர்வ இசை எழுப்பியுள்ளனர் என்பதை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.

" தளிச்சேரிப் பெண்டுகுளுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகம் வெய்ய"

துளிச்சேரியில் குடியமர்த்தப்பட்டுள்ள கலைக்குடும்பப் பெண்கள் முறைச் சேவையாக கோயில்களில் பாடியிருந்திருக்கலாம். அவர்களை " காந்தர்விகள்" என்று இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இசைச்சேவை செய்வதை "நாயகம்" செய்ய குறிப்பிட்டிருக்கலாம்.

அதே நேரம் திருவையாறில் உள்ள உலகமாதேவீஸ்வரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டு "காந்தர்வர்" என்று ஆண் பாடகரை குறிப்பிட்டுள்ளது.

"பஞ்சாசாரியர் உள்ளிட்ட காந்தர்வருக்கும்"

பஞ்சாசாரியரும் இசைக்கலைத் தொடர்புடையவர்களாக இருந்திருக்கலாம். இவர்கள் அனைவருக்கும் கோயிலால் நனகொடைகள் வழங்கப்பட்டிருக்கும்.

## திருக்கோளிலி

இத்தலத்தில் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1251 - 1258 ) காலத்து கல்வெட்டொன்றில் இவ் அரசன் பிறந்த நாளாகிய திருவாதிரை தோறும் அரசனுக்கு நல்லவை உண்டாக, பெருமானும் நாச்சியாரும் சிறப்பமுது செய்தருளித் திருவுலாப்போதவும், ஆளுடைய பிள்ளையார் திருநாளமுது செய்து திருவுலாப் போதவும், தேவாரம் அருளிப்பாடவும் , நிலம் வாங்க அளித்தான் என்ற செய்தி காணப்படுகிறது.

திருவிடைமருதூர்

இத்தலத்தில் உத்தம சோழன் காலத்து கல்வெட்டு ஒன்று உள்ளது.அதில் காஸ்யபகண்டன் கோயிலில் தேசிக்கூத்து ஆடிப்பாடியிருக்கிறான். அதற்காக அவனுக்கு நிலமானியம் அளிக்கப்பட்டிருக்கிறது. "தேசி" என்பது ஒருகை கூத்து என்பது ஆய்வாளர்கள் கருத்து.

இவ்வாறு மேற்கண்ட ஆலயங்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் பண்ணிசைக்காக மன்னர்கள் எடுத்த முயற்சிகளும், அவற்றை பாதுகாக்க நிலங்கள் வழங்கியமையும் போன்ற செய்திகளை அறிய முடிகிறது.

ஶஶஶஶஶஶஶஶஶஶ




WITH COURAGE AND FAITH


Annamalai University
416 777 · Auc. (2822)

# அவசர உலகில் எம் வாழ்கையை மேம்படுத்தும் யோகக்கலை

**சிவலிங்கம் ஜெயறஜீன், எம். எஸ்ஸி (யோகா)**
**யோகா விரிவுரையாளர், அண்ணாமலைக் கனடா வளாகம்**

எமது மூத்தவர்கள் பல்லாண்டு தேகாரோக்கியத்துடன் வாழ்ந்தார்கள். ஆனால் எனது தலைமுறை மட்டும் சிறுவயதில் பொட்டென்று போகிறதே! என்னடா ஏதோ வருத்தங்கள் உடலை வாட்டுகின்றனவே! இது எங்கும் என்வயதில் உள்ளவர்களிடம் நான் இன்று கேட்கும் புலம்பல்கள். ஏன் எம் வாழ்க்கை மாறிப்போனது? எங்கு நாம் தவறு இழைத்து வருகின்றோம்? தேடுதலை எம்மில் பலர் தொலைத்துவிட்டிருப்பதால் அதற்கான பதிலும் அற்றவர்களாகவே இருக்கின்றோம். எம் மூத்தவர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து எங்கெல்லாம் நாம் மாறி இருக்கின்றோம் என்ற கேள்விக்கான பதிலே எம் தேடுதலின் ஆரம்பமாகின்றது.

அவர்களது வாழ்க்கைமுறை, உணவுமுறை, உடற்பயிற்சிமுறை, சுவாத்தியச் சூழல் என அனைத்திலும் நாம் மாறி விட்டோம். இயந்திர வாழ்க்கைக்குள் எம்மை உட்படுத்திவிட்டோம். அத்துடன் எமது மூலமான எமது உடலின் ஆரோக்கியத்தை புறம் தள்ளி விட்டோம். அதன் முக்கியத்துவத்தையும், அதன் அவசியத்தையும் சிந்திக்க தவறி வருகின்றோம். அதன் விளைவுகளை உடலியல் ரீதியாக நோய்களாக எதிர்கொண்டு நிற்கின்றோம்.

சீறிய உடலியல் வாழ்க்கைக்கு வழி கண்டவர்களும் தமிழர்கள் நாமே. சித்த மருத்துவத்தினூடாக நோய் நிவாரணிகளை இயற்கையாகவே கொண்டவர்களும் நாங்களே. நாம் படைத்த யோகக்கலையின் மகத்துவத்தை ஏனையோர் உய்துணர்ந்து பயிலும் போது நாம் பார்வையாளர்களாக மாறி நோய்களின் பிடியில் உழல்கின்றோம்.

உடற்பயிற்சியும், யோகாசனமும், தியானமும் எல்லாமே உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்தி செயற்பாட்டில் முழுபயன்பாட்டில் வைத்திருக்கும் கருவிகள் என்பதே மன, நல, வள, இயற்கை மருத்துவம் மனம் ஒரு குரங்கு என்பார்கள். அம் மனத்தை கட்டுக்குள் கொண்டுவருவது என்பது யோகாசனத்தின் மூலமாகிறது. பயிற்சியின் போது மனம் வேறு சிந்தனையில் ஈடுபடவே கூடாது. ஓவ்வொரு அசைவின் போதும் நம் உடலின் தசைநார்கள் விரிவடைவதையும் சுருங்குவதையும் மூட்டுக்கள் சுழல்வதையும் உற்றுக் கவனித்து உணர்ந்து ஈடுபட வேண்டும்.

மூச்சு உள்வாங்குவதையும் வெளியிடுவதையும் உணர்ந்து புரிந்து, அதன் வேகம், ஆழம், செயற்பாடு, அளவு அறிந்து அதனுடன் ஒன்றித்து ஈடுபட வேண்டும். இப்பயிற்சிகளின் போது உடல் வலிமை கூடி வளம் சேர்ப்பது போல, உள்ளமும் வலிமை கூடி வளம் கட்டி வருகின்றது என்பதை அனுபவத்தில் கண்டு கொள்ள முடியும். இன்னுமொரு அடிப்படை உண்மையையும் நாம் ஆழ்ந்து, சிந்தித்து உணர வேண்டும். நாம் விரும்பியவாறு விரித்து, சுருக்கி தசைகளுக்கு பயிற்சி அளிப்பது ஒரு விதம். தன்பாட்டில் செயற்படும் உள்ளுறுப்பு செயற்பாடுகளுடன் பிணைந்திருக்கும் நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுநீரகம், கருப்பை, கற்பப்பை முதலான உறுப்புக்களும் அதில் சுரக்கும் உடல் இயக்கத்திற்கு தேவையான ஊற்றுக்களை சுரக்கும் சுரப்பிகளுக்கும் இன்றியமையாத பயிற்சியும் இன்னொரு விதம்.

இவ்வாறான சுரப்பிகளின் தொடர்ச்சியான இடைவிடாத அளவான ஊற்றுக்கள் தான் நம் உடலை சமச்சீர் நிலையில் வைத்திருக்கின்றன. கழுத்தில் உள்ள தைரோயிட்டு சுரப்பியில் இருந்து சுரக்கும் தைரொக்சின் அதிகமானால் உடல் மெலிவதும், குறைந்தால் உடல் பருத்துக் கொண்டே செல்வதும் ஒருவித நோய். கணையத்தில் சுரக்கும் இன்சுலீன் தான் இரத்தத்தில், சர்க்கரையின் அளவை கட்டுக்படுத்தி வைத்திருக்க உதவுகிறது. இவ்வாறு ஒவ்வொரு சுரப்பியின் குறைபாடும் ஒருவித நோயை எமக்கு கொடுத்து விடுகிறது.

இவ்வாறான உடலியல் சவால்களை எதிர்கொள்வதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எம் மூத்தவர்கள் வகுத்து வைத்திருப்பதே யோகாக்கலை. யோகாசனப் பயிற்சிகளை முறையாக கற்பதுவும், கைக்கொள்வதுவும் நாம் வாழும் இன்றைய அவசர உலகில் எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அத்தியாவசியமாகின்றது.

## எமது மனத்தை வெல்வதினூடாக உடலியலையும் வெல்லுவது எப்படி?

யோகாசனத்தின் முதன்மையான மனதை ஒருமுகப்படுத்திய தியானத்தை மேற்கொள்ள எம்மை வளப்படுத்திக் கொள்வது எப்படி? சவால் நிறைந்த கேள்வி? எமது மனதை எமது கட்டுக்குள் நாம் கொண்டுவரும் போது உடலியல், மனயியல் ரீதியாக ஏற்படுகின்ற அமைதியான மாற்றங்களை எம்மால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு வழியில் சிந்திக்கப்பழகிக் கொள்கின்றோம். எனது பல்கலைக் கழக வாழ்வில் நான் கற்றறிந்த ஒரு முதுமொழி இதற்கான ஒரு பதிலாக அமையலாம்.

Small Minds Discuss People
Average Minds Discuss Events
Great Minds Discuss Ideas

என அது அமையும். நாம் இதில் எந்தவகையைச் சேர்ந்தோம் என்பதை நாமே எம்மிடம் கேட்டுக் கொள்ளலாம். முதல் வகையைச் சேர்ந்தோர் என்றும் மக்களைப் பற்றியே பேச விரும்புபவர்கள், சிந்திப்பவர்கள் அல்லது தம்மை அவ்வாறு பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். இதனையே நாம் வழக்கத்தில் கொண்டால் பேசுவதற்கான எமது அளவு எல்லையற்று செல்வதை நாம் உணரலாம். எமது மனம் எல்லையற்று எங்கும் தாவலாம். ஏனெனில் உலகில் இன்று 7 பில்லியன் மக்கள் இருக்கின்றார்கள்.

இரண்டாவது வகையினர் சம்பவங்களைப்பற்றியே பேச விரும்புபவர்கள், சிந்திப்பவர்கள் அல்லது அவ்வாறு தம்மை பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். மக்களைப்பற்றி சிந்திப்பவர்களிலும் பார்க்க இவர்களது மனம் தாவும் அளவு குறைவாகவே இருக்கும். ஏனெனில் பேசக்கூடிய அல்லது அறிந்த சம்பவங்களின் அளவு குறைவானதாகவே உள்ளது.

மூன்றாவது வகையினர் திட்டங்களைப்பற்றி, செயற்பாடுகளைப்பற்றி, புதிய வழித்தடங்களைப்பற்றி பேச விரும்புபவர்கள், சிந்திப்பவர்கள் அல்லது அவ்வாறு தம்மை பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். இவர்களால் தமது சிந்தனை வட்டத்தினுள் இருந்து விரைவாக வெளிவர முடியும். ஒருமுகப்படுத்திய தியானம் என்பது இவர்களால் எளிதில் எட்டமுடியும்.

நாம் அனைவரும் மேற்கண்ட மூன்று வகைகளின் ஒரு கலவையாகவே உள்ளோம். ஆனால் ஒன்றில் ஏனைய வகைகளிலும் அதிகமாகவே உள்ளோம். அது எது என்பதை கண்டவறிவதும், அது முதல் அல்லது இரண்டாவது வகையினராக இருந்தால் அதில் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதும் எமது மனத்தை வெல்வதற்கான ஒரு வழிவகையாக அமையலாம்.

என்னுடைய மக்கள் தொடர்பாடலில் எம்மில் பெரும்பாலானோர் முதல் வகையினராகவும், குறிப்பிடத்தக்கோர் இரண்டாவது வகையினராகவும், மிகச் சிலரே மூன்றாவது வகையினராக உள்ளதையும் கண்டுள்ளேன்.

ஒரு இயந்திர உலகத்தில் வாழும் நாம் எமது மனத்தை வெல்வதினூடாகவோ அல்லது ஒருமுகப்படுத்துவதினூடாகவோ இலகுவாக இயற்கை உலகத்துடனான ஒரு வாழ்வை உருவாக்கிக் கொள்ள முடியும். தியானத்தினூடாக அவ்வியற்கை உலகத்துடன் நாம் இணைய முடியும். அது ஒரு ஆரோக்கிய வாழ்விற்கு வித்திடுகிறது.

எமது மனம் அலைபாயும் போது அது பல உணர்வுகளுக்கு ஆட்படுகின்றது, அவ்வாறான பல்வேறு உணர்வுகளின் கலவை எம்மை உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு இட்டுச் செல்கிறது. எமது தமிழ் சமூகத்தில் பலர் குறிப்பாக கனடாவிலும் தாயக சூழல் காரணமாக அங்கும், இவ்வாறான உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

இவ்வாறான உளவியல் தாக்கங்களுக்கு அவர்கள் ஆளாகும்போது அவர்கள் தமது உடலின், மனதின் கட்டுப்பாட்டை முழுமையாக இழப்பதைக் காண்கின்றோம். உடல் கட்டுப்பாடு இழக்கப்படுவதன் காரணமாகப் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

"நான்" "எனது" "எனக்கு" "என்னுடையது" என்ற குறுகிய தன்னல வட்டத்திற்குள் வாழ முற்படுபவர்களும் மனதை ஒருமுகப்படுத்துவதில் பெரும் சிக்கலை எதிர் கொள்கின்றனர். ஒரு குறுகிய வட்டத் தெரிவுகளினூடாக அவர்கள் தங்கள் வாழ்க்கையை சிக்கல் நிறைந்ததாக்கி விடுகின்றனர். இக்குறுகிய சிந்தனை வட்டம் எதிர்பார்ப்புக்களை அதிகரித்து அதனால் ஏற்படும் எதிர்கொள்ளும் சவால்களை அதிகரித்து மனநலத்தை பாதிக்கிறது. எம்மில் பலர் குறுகிய வட்டச்சிந்தனைகளூடாக எம்மைச் சுற்றி நாமே வேலி எழுப்பிக் கொள்கின்றோம். பெரிய சிந்தனை

வட்டத்திற்குள் வர எம்மை நாமே பழக்கிக் கொள்ளவேண்டும். அதற்கான முதல் முயற்சியாக எம்மிடம் நாமே கேள்வி எழுப்பி முதலில் சிறிய வட்டத்திற்குள் சிந்தித்து பின்னர் அதற்கான பதிலை விரிவாக்கி சந்திக்க ஆரம்பிக்கலாம்.

நான் யார்?
எனக்கு என்ன தேவை?
என்னால் எவ்வாறு உதவ முடியும்?

கண்ணை மூடித் தியானித்தவாறு ஒவ்வொரு கேள்வியாகப் பதில்களைத் தேட ஆரம்பியுங்கள். முதற் கேள்விக்கு ஒரு பதில் கிடைத்ததும் அதனை புறம்தள்ளி விட்டு அதற்கான மேலும் ஒரு பதிலைத் தேடுங்கள்.

நான் ஒரு மருத்துவர், நான் ஒரு தமிழன், நான் ஒரு மனித உரிமைவாதி, நான் ஒரு ஆய்வாளன். இவ்வாறு எனது மனம் ஒரு கேள்விக்கு பல்வேறு பதில்களினூடாக விரிவாக்கம் கண்டு செல்லும். மனதை வெல்வது என்பது எமது அயராத முயற்சியிலே தங்கியுள்ளது. முதலில் முயற்சியை ஆரம்பியுங்கள், நீங்களும் ஒரு கோடியை வெல்வதற்கு முன்னர் நிச்சயம் உங்கள் உடலியலை வெல்லலாம்.


Arulsubramaniam Saba M.A
President/Managing Director

Off: 647 378 3006
Res: 905 479 5375
Cell: 647 706 6124

THAMIL POONKA

Thamil Poonka School
328 Passmore Ave. #25
Scarborough, ON M1V 3N8

- Tamil Class and Tamil Teachers' Training
- Yoga class & Yoga Therapy
- Tamil Reading Club
- Home work Class
- English Spoken Class
- Referral to Settlement Services
- Youth Leadership Session
- Career Planning
- Counselling
- Sewing Class & Cake Making Class

*"Utmost for The Highest"*

# புலம் பெயர்ந்த நாடுகளில் எமது இசையும் இளைஞர்களும்

சிவசம்பு ஸ்ரீதாஸ்
(Super Grade Veena and Flute Artist - Sri Lanka Broadcasting Corporation and Rupavahini)

இசை கற்பது எமக்குத் தெரியாத ஒரு புதிய மொழியைக் கற்பது போன்றதொரு புதிய அனுபவமே. உதாரணமாக, எமது தாய் நாடாகிய இலங்கையில் பெரும்பான்மையினர் பேசும் மொழியான சிங்களத்தை எடுத்துக் கொள்ளுவோம். நம்மவர்களில் கொழும்பில் வசித்த பலருக்கும் சிங்கள மொழி புரியும். சிலர் பேசுவார்கள், வெகு சிலர் அவர்களைப் போலவே பேசுவார்கள். எத்தனை பெயரால் அப்படிப் பேச முடிகிறது. ஒரு அளவிற்குப் பேசி, மற்றவர்கள், விடயத்தைக் கிரகிக்கும் அளவுக்குப் பேசும் ஆற்றல் மட்டும் இருந்துவிட்டால் போதும் என்று எண்ணுபவர்கள் சிலர், ஒரு பிரயத்தனமும் எடுக்காமலே ''எனக்கேன் சிங்களம்'' என்று இருந்து விடுவார்கள் சிலர், சிலர் பல வருடகாலம் சிங்களச் சூழலிலேயே வாழ்ந்திருந்தாலும், என்ன முயற்சி எடுத்தாலும் வாய்திறந்து இருவார்த்தையும் பேசவே மாட்டார்கள். எங்கள் பாரம்பரிய இசையான கர்னாடக இசையை நம்மவர்கள் அணுகுவதும் இதே போன்றே. சிலரைக் கவரும், பலரை நெகிழ வைக்கும், ஆனால் வெகு சிலரையே ஆட்டிப்படைக்கும். ஆம் எப்படியாவது நான் இசையைப் புரிந்து கொண்டு மற்றையோரையும் என் இசையால் மகிழ வைக்கவேண்டும் என்று எண்ணும் சிலரே விற்பன்னர் ஆகிறார்கள். விற்பன்னர்களிலும், ஏனைய துறைகளைப் போலவே இசையிலும் தரம் பல இருக்கும் என்பது தெரிந்ததே.

புலம் பெயர்ந்த எம்மவர்கள் எமது பாரம்பரியக் கலைகளின் மகத்துவத்தை உணர்ந்தவர்கள் என்பதால் அடுத்த தலைமுறையினரும் அதை நுகர்ந்து போற்றவேண்டும் என்று உணர்ந்த நிலையில் தம் குழந்தைகளுக்கும் அவற்றைப் புகட்ட எத்தனிக்கிறார்கள். எல்லோருமே விற்பன்னர்களாகத் தேறி விடுவதில்லை. Some show acadamic interest. Some Acadamic non-Interest. அதாவது, பள்ளிப் பாடத்திற்குக் காட்டும் வெறுப்பையே இசைக்கும் காட்டுவார்கள், Some show passionate interest. இதில் மூன்றாம் இரகத்தினரே இசையில் எதையாவது சாதிப்பார்கள். இந்த இரகத்தைச் சேர்ந்த ஓர் குழந்தையின் சாதனையை நாம் பாராட்டவே செய்கிறோம். தட்டிக் கொடுக்கிறோம். ஊக்கம் தந்து அரங்கேற்றம் வரை அழைத்துச் செல்கிறோம்.

இசை, குரலிசை, வாத்திய இசை என்னும் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆனால் நாம் மனம் கொள்ள வேண்டியது "இசை என்பது ஒன்றே" என்பதாகும். இசையை வெளிப்படுத்தும் கருவி அல்லது வாகனம் தான் வேறு. ஒன்று ''குரல்'' மற்றயது ''வாத்தியம்''. உதாரணமாக, குரலிசையைச் சிலைக்கும் வாத்திய இசையை வரைபடத்திற்கும் ஒப்பிடலாம். மேலெழுந்தவாரியாக, குரலிசைக்கும் வாத்திய இசைக்கும் உள்ள வேறுபாடு Tonal Quality இல் தான். அதாவது ''நாதத்தின் தன்மை'' என்று சொன்னாலும் வேறும் ஒரு முக்கியமான அம்சத்தில் தான் மிகையான வேறுபாடு உண்டு. அது தான் Harmonics என்று சொல்லப்படுவது, வெளிப்படும் ஓசையில் Multiple Octaves தொனிப்பது. எமது குரலிலே தான் அதிகப்படியான Harmonics தொனிப்பது. அதற்கு அடுத்தபடியாக அப் பண்பை உடையது வீணை வாத்தியமே. மற்றய வாத்தியங்கள் எல்லாம் Harmonics விடயத்தில் குரலின் செறிவை விட எவ்வளவோ குறைந்தது தான். ஆனாலும் வேறுபாடுகளை நாடும் எமக்கு வயலின் உள்ளிட்ட ஏனைய வாத்தியங்களும் அத் தேவையை முடித்து வைக்கின்றன.

நாம் ஒரு பாடலை வாயால் பாடும் பொழுது எத்தனை மெய்ப்பாடுகள் வெளிப்படுகின்றனவோ அத்தனையையும் வாத்தியத்தில் கொண்டு வரவேண்டும். இதுவே எமது வாத்திய இசையின் இலக்கணம், இலக்கு, இலட்சியம் எல்லாமே. ''சின்னஞ்சிறு கிளியே'' அல்லது ''அலைபாயுதே'' போன்ற ஜனரஞ்சகமான பாட்டை வாத்தியத்தில் இசைக்கக் கேட்டு – அந்தப் பாடலை வாயால் பாடியது போன்றே இருந்தால் தான் 'நன்றாயிருக்கிறது' என்று சொல்கிறோம். எனவே எமது referance வாய்ப்பாட்டுத் தான். ஆகவே வாத்தியக் கலைஞருக்கும் வாய்ப்பாட்டு ஞானம் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். குறித்த இராகத்தின் அம்சங்கள், நெளிவு சுளிவுகளைக் காண்பிப்பதோடு அப் பாட்டின் வரிகள் கூறும் தகவலை அதே உணர்ச்சிப் பெருக்குடன் ஒப்புவிக்கவேண்டும். இதுவே எமது வாத்திய சங்கீதத்திற்குச் சவால். எந்த அளவிற்கு இவ் அளவுகோலின்படி வாத்தியக் கையாள்கை அமைகிறதோ அந்த அளவிற்குத்தான் வாத்தியக் கலைஞரின் வெற்றி அமைகிறது. இதற்கு மிருதங்கக் கலைஞர்கள் கூட விலக்கல்ல. விரல்விட்டு எண்ணக்கூடிய முன்னணி மிருதங்கக் கலைஞர்களைத் தான் எல்லோரும் அறிந்திருப்பார்கள். அவர்கள் அனைவரும் தரமான வாய்ப்பாட்டு ஞானம் உள்ளவர்களே. அப்படி இல்லாதவர்கள் முன்னணிக்கு வருவதுமில்லை. நாம் அவர்களை

அறிந்து கொள்வதுமில்லை. வாய்ப்பாட்டு ஞானத்தின் அனுசரணையில் ஒன்பதே ஸ்வரங்களை வைத்துக் கொண்டு உருப்படியை வாசிப்பார்கள். இது அவர்களுக்குச் சவாலாகும்.

அறிவு கடல் போன்றது. இசையும் அது போன்றதே. அறிந்து, நுகர்ந்து அனுபவிக்க எவ்வளவோ இருக்கின்றன. கற்றக் கற்க, இன்னும் எவ்வளவோ இருக்கிறதே என்ற விரக்தி தான் மிஞ்சும், மிஞ்ச வேண்டும். This is part and parcel of pursuit of perfection which, in turn, is an adjunct to Art – of whatever form – Music, Dance, painting or anything whatsoever. "என் குரு சொல்லி வைத்ததே போல் நான் எல்லாமே திருப்தியாய்ச் செய்தேன்" என்றதொரு திருப்தி ஒரு மாணவன் மனத்தில் ஏற்பட்டால் அதுவே கலையின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகி விடும். The Horizon should ever be receding.

இசை மேதை இரவிசங்கரை அறியாதார் இசையுலகில் இருக்கமாட்டார்கள். அவர் வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் "நான் இன்னும் ஒரு இசை மாணவனே" என்றார். இவை, உள்ளார்ந்த உணர்வுகளுடன் அவர் சொன்ன வார்த்தைகளே. அவரது இக் கூற்று மூலம் அவர், "இசையின் பரிமாணத்தை" கோடிட்டுக் காட்டியிருக்கிறார். "இசைமேதை" அப்படி, இப்படி என்றெல்லாம் நம்மவர்களை வருணிப்பதை நாமே கேட்டிருக்கிறோம். 'மேதை' என்னும் பதத்திற்கு ஆங்கிலத்தில் 'Prodigy' என்பது பொருள். 'Prodigy' என்பதற்கு '12 வயதிற்கு உட்பட்ட ஒருவர் ஏதாவது ஒரு துறையில் உயர் அங்கீகாரம் பெற்ற வயது வந்த, அதாவது Adult – சாதனையாளரை ஒத்த அல்லது மிஞ்சிய தேர்ச்சியைக் காட்டுபவர் - என்பது பொருளாகும். சங்கீத உலகில் அவ்வாறு மேதாவிலாசத்துடன் விளங்கியவர்கள், மன்டலின் ஸ்ரீநிவாசன், வீணை காயத்திரி, புல்லாங்குழல் சஷாங்க் போன்ற ஒரு சிலரே. ஆகவே, நாம் எமது அபிமானத்தையோ விருப்பத்தையோ மட்டும் அடிப்படையாக வைத்துக் கொண்டு பொருளற்ற அடைமொழிகளைப் பயன் படுத்துவதைத் தவிர்க்கலாம். எமக்குத் தெரியாததை மிகைப்படுத்தலாம். தெரிந்ததையல்ல. எதிர் காலத்தில் உயர்நிலைக்கு வரக்கக்கூடிய சாத்தியக்கூறின் அடையாளம் காணப்படுமிடத்து, அவ்விளம் கலைஞனிடம் காணப்படும் சிறப்பம்சங்களைக் கோடிட்டுக் காட்டி வழிகாட்டவேண்டும். கர்நாடக இசையின் அளவுகோல் என்றும் மாறாது. வளைந்தும் கொடுக்காது.

இலக்கு மிக உயரியதாக அமையவேண்டும். அப்பொழுது தான் பாதிவழியையாவது கடக்கலாம். லால்குடி ஜெயராமன் மாதிரி நான் வாசிக்கவேண்டும் என்று வயலின் மாணவனது இலக்கு அமைய வேண்டும். அவ்வாறு எண்ணுவதுடன் மட்டும் அமையாது கடும் உழைப்பால் அதனைச் சாதித்தும் காட்டவேண்டும். எமது இளம் கலைஞர்கள் தமது இலக்குகளைத் தாமே தீர்மானிக்கக் கூடிய அளவு வசதிகளும் வாய்ப்புகளும் அவர்களுக்கு நிறையவே இருக்கின்றன. விஞ்ஞானம் அவர்கள் கைகளில் தவழ ஆரம்பித்துவிட்டது. பெற்றோரும் அவர்களுக்கு அனுசரணையாக இருக்கிறார்கள். இளம் கலைஞர்கள், நான் சாதிக்கப் பிறந்தவன் என்னும் உறுதியான எண்ணத்துடன் முன்னேறவேண்டும். அப்படியான இளைஞர்களுக்கு இந்த மண்ணில் வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செய்யும் பணியை, மிகச் சிறிய அளவிலேனும் புலம் பெயர் நாட்டில் அண்ணாமலைக் கனடா வளாகம் செய்து வருகிறது. அடுத்த தலைமுறையை உருவாக்குவதில் அதன் பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

ஐஐஐஐஐஐஐஐஐஐ


www.myAUCC.com
Annamalai Arts Festival



# பாலர் முதல் வளர்ந்தோர் வரை தமிழ்மொழித் திறன்

விமலா பாலசுந்தரம், எம். ஏ.

உலக நாடுகள் நோக்கிய தமிழரது புலப்பெயர்வு 19ஆம் நூறாண்டிலே தொடங்கிய போதிலும் குறிப்பாக 1980களுக்குப் பின்னர் ஈழத்திலிருந்து பல இலட்சக் கணக்கில் தமிழரின் புலப்பெயர்வு இடம்பெறுவதாயிற்று. ஆங்கிலேயரால் தொழிலடிப்படையில் தென்பிரிக்கா, மொறிஸியஸ், பிஜித்தீவுகள் முதலிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட தமிழர் தமது மொழியை மறந்து, தமிழர் என்ற அடையாளத்தையே இழந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் தம் தாய்மொழியாம் தமிழை மறந்தமையே இதற்கு அடிப்படைக் காரணமாகும். 'மொழியே ஒரு பண்பாட்டின் உயிர் நாடி' என்பதைப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் அனைவரும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

1980 களுக்குப் பின்னர் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்த தமிழர் கனடாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் குடிகொண்டுள்ளனர். இவர்களின் இரண்டாம் தலைமுறையினர் இப்போது இந்நாடுகளிலுள்ள பாடசாலைகளில் அவ்வந்நாட்டு மொழிகளில் கல்வியை மேற்கொண்டுவருகிறார்கள். இவர்கள் பாலர் பருவத்திலிருந்து பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் பிறமொழிப் பயிற்சியோடு வளர்கிறார்கள். பெற்றோர் பிள்ளைகளுடன் தமிழில் உரையாடுவதற்கே நேரமில்லாதுள்ளனர். கனடாவைப் பொறுத்தவரையில் எம்மவரிடையே பெரும்பாலும் எங்கும் எப்போதும் ஆங்கிலமே ஒலிக்கிறது. தமிழில் உரையாடும் திறன் இருந்தும் சிலர் தமிழ் தெரிந்த மற்றவருடன் தாம் தமிழில் உரையாடுதல் தரக் குறைவென்று நினைத்து ஆங்கிலத்தில் உரையாடும் பரிதாபநிலையும் உண்டு. தம் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பிக்கத் தேவை இல்லை என்று கருதும் பெற்றோரும் எம்மிடையே வாழ்கிறார்கள் என்பது மனவருத்தத்திற்குரிய உண்மையாகும்.

ஆனால் பெருந்தொகையான பெற்றோர் தம் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைக் கற்பிப்பதில் மிக்க அக்கறையுடையவர்களாக உள்ளனர் என்பதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தமிழ்மொழியோடு தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக இசை, நடனம் என்பன கற்பிப்பதிலும் பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர். கனடாவின் அரசியல் யாப்பில் அனைத்து மொழிகளுக்கும், பண்பாடுகளுக்கும் பாதுகாப்பும் அவற்றைப் பேணும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தமிழர்களாகிய நாம் நினைவிற் கொள்ளவேண்டும். அதன் அடிப்படையில் ஒன்ராறியோ மாகாண அரசு அனைத்துலக மொழிக் கல்வித்திட்டத்தை உருவாக்கியுள்ளது. ரொறன்ரோ, பீல், டர்றம், யோர்க் முதலான நகரங்களிலுள்ள அரச பாடசாலைச் சபைகளும், கத்தோலிக்கப் பாடசாலைச் சபைகளும் தமிழ் வகுப்புக்களை நடத்தி வருகின்றன. இவற்றோடு பல்வேறு பொதுஅமைப்புக்களும், தனியார் நிறுவனங்களும் தமிழ் கற்பிப்பதிற் பெருமுயற்சி எடுத்துவருகின்றன. தமிழ் வகுப்புக்களில் ஆண்டு எட்டுவரை கற்ற மாணவர் தொடர்ந்து திறமைச் சித்தி வகுப்புக்களில் சேர்ந்து கற்கும் வாய்ப்பும் உள்ளது. அதே போன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகம் வளர்ந்தோருக்கான உயர்நிலைத் தமிழ்க்கல்வியை இளங்கலைமானி, முதுகலைமானி பட்டப்படிப்பு மூலமாக கடந்த ஏழு ஆண்டுகளாக வழங்கிக் கொண்டிருக்கிறது..

ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபை அனைத்து மொழிகளுக்குமான பாடத்திட்டத்தை உருவாக்கி, அதற்கமைவாகப் பாடநூல்களைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது. அத்துடன் தமிழ்மொழி கற்பிப்பதில் பல்லாண்டு பயிற்சியுடைய ஆசிரியர்கள் சிலரும் தமிழ் கற்கும் மாணவருக்கு ஏற்ற வகையிலான பாடநூல்களையும் இறுவட்டுக்களையும் தயாரித்து வழங்கிவருகின்றனர். ஏனைய மொழிகள் கற்கும் மாணவருக்கு இல்லாத வசதிகளும் வாய்ப்புக்களும் தமிழ் மாணவருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு எமது பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இங்குள்ள பல்வேறு அமைப்புக்கள், கலை - பண்பாட்டு மன்றங்கள், பாடசாலை மன்றங்கள் முதலியன ஆண்டுதோறும் மாணவருக்கான பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி என்பவற்றை நடத்தி மாணவரின் தமிழ் எழுத்துத்திறன், பேச்சுத் திறன் என்பவற்றை வளர்ப்பதில் மிக அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றன. ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம் ஆண்டுதோறும் தமிழ் வகுப்புக்களில் கற்பிக்கப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தேர்வுகளை நடத்தி மாணவருக்குத் தமிழ்மீதான ஆர்வத்தை ஊக்குவித்து வருகின்றது. அத்துடன் தமிழ் ஆசிரியர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்குரிய திறன்களை வழங்குவதற்காக ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபை ஆண்டுதோறும் பயிற்சிப் பட்டறைகளை நடத்திவருகின்றது. இவ்வாறாக ஒன்ராறியோ மாகாணக் கல்வி அமைச்சு தமிழ் கற்பதற்குரிய அனைத்து வசதிளையும் மாணவருக்கு வழங்கியுள்ளது என்பதை முதலிற் குறிப்பிட விழைகின்றேன்.

ஆயினும் தமிழ் வகுப்புக்களுச் செல்லும் மாணவரின் தொகை மிகக் குறைவாகவே உள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்வதாகக் கூறப்படுகிறது. அதனடிப்படையில் பார்க்கும்போது இங்கு தமிழ் வகுப்புக்களுக்குச் செல்லும் பிள்ளைகளின் வீதாசாரம் மிகவும் குறைவானது என்பது கவலைக்குரியது. எனினும், கடந்த காலங்களிலும் பார்க்க இப்போதுள்ள இளம்பெற்றோர் தமது பிள்ளைகளைத் தமிழ்மொழி வகுப்புக்களுக்கு அனுப்புவதில் மிக்க அக்கறை காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தமிழ்மொழி உரிமைக்காகப் போராடியவர்களின் வழிவந்த ஈழத்தமிழர் தாய்மொழியை உயிருக்கு நேராக நேசிக்க வேண்டியது கடமை அல்லவா!.

பொதுவாகத் தமிழ் வகுப்புக்களில் பயிலும் மாணவரின் வருகையை நோக்கும்போது பாலர் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை மாணவரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டு, 6ஆம் வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்களுக்குச்

செல்லும்போது மாணவர் வரவு மிகவும் குறைந்து செல்வதை அனேகமான பாடசாலைகளில் கவனிக்கக் கூடியதாக உள்ளது. பாடசாலை (Regular School) வகுப்புக்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் வீட்டுப் பாடவேலைப் பழுவே இதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. ஆயினும் இவற்றையும் சமாளித்துத் தமிழ் வகுப்புக்களுக்குத் தொடர்ந்து வருகை தந்து தமிழ்மொழித் திறனை வளர்த்துக் கொள்ளும் மாணவர் பாராட்டப்பட வேண்டியவராவர்.

தமிழ் வகுப்புக்களிற் கற்கும் மாணவர் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களையும் பெற்றுக்கொள்ளும் வகையில் கற்பிக்கப்படுகின்றது. பாலர் வகுப்பு முதல் எழுத்துக்களை எழுதிப் பழகி வாசிக்கத் தொடங்கித், தமது சொல்வளத்தைப் பெற்றுக்கொள்ளும் மாணவர் தழிழில் நன்கு உரையாடக் கூடிய ஆற்றலைப் பெறுகின்றனர். இவர்கள் மேல் வகுப்புக்களில் எழுத்தாற்றலையும் அதிகளவில் வளர்த்துக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் மேல் வகுப்புக்களுக்குச் செல்கையில் தமிழில் பேசும் திறன் குறைந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் பாடசாலையிலும், ஊடகங்களிலும் மிக நீண்ட நேரம் ஆங்கிலத்தில் உரையாடுவதாலும், தமிழில் அக்கறை காட்டாமையாலும், பாடசாலை வேலைப் பழுவினாலுமே இந்நிலை ஏற்படுகிறது என எண்ணத் தோன்றுகிறது.

பிள்ளைகள் தமிழ்மொழித் திறன் உடையவராக வளர்வதற்கு அவர்களுக்குத் தழிழ்மொழியைக் கற்பதில் ஆர்வம் ஏற்பட வேண்டும். தாய் மொழியில் உரையாட வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறுதல் பெற்றோர் தம் கடமையாகும். அவர்கள் வகுப்பு முடிந்து வீட்டுக்கு வந்ததும் தமிழ் வகுப்பில் என்ன படித்தார்கள், அவர்களுக்குத் தரப்பட்ட வீட்டுவேலை என்ன என்பது பற்றி ஆர்வத்தோடு உரையாடி ஊக்கப்படுத்துதல் பெற்றோரின் பொறுப்பாகும்.

இதற்கும் மேலாகப் பெற்றோர் பிள்ளைகளுடன் தமிழில் பேசுதல் அவசியமாகும். பிள்ளைகள் அதிக நேரம் பாடசாலையில் ஆங்கிலமொழிச் சூழலில் இருப்பதால் தமிழில் பேசும் வாய்ப்பு அவர்களுக்கு வீட்டில்தான் கிடைக்கிறது. வீட்டில் குடும்ப உறுப்பினர் சேர்ந்திருக்கும்போதும், உணவு உண்ணும்போதும், பொழுதுபோக்கு வேளைகளிலும் கட்டாயமாகத் தமிழில் உரையாட வேண்டும் என்ற ஒரு ஒழுங்கை ஏற்படுத்திக்கொள்ளுதல் நல்லது. பிள்ளைகள் தமிழில் பிழையாகப் பேசினாலும் அதனைத் திருத்தமாகச் சொல்லிக்கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி, தமிழில் பேசுவதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதே தக்க முறையாகும். தொடக்கத்தில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவதற்கு இடமளித்தால் விரைவில் சரியான முறையில் தமிழில் பேசும் திறனை அவர்கள் பெற்றுக் கொள்வர். வகுப்புக்களில் நடத்தப்படும் தேர்வுக்காகவும் மற்றும் போட்டிகளுக்காகவும் எழுதவும், பேசவும் தெரிந்தால் போதும் என எண்ணுதல் தவறாகும். தாய்மொழி கற்பதன் முதல் நோக்கம் பிள்ளைகள் தம் வாழ்நாளில் தமிழிற் பேசுந்திறனைப் பெற்றுக்கொள்வதற்கே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பாடசாலைச் சபையினால் நடத்தப்படும் தமிழ்மொழி வகுப்புக்களில் மாணவர் வாரத்தில் ஒரு நாள், அதுவும் 2.5 மணித்தியாலங்கள் மட்டுமே தமிழ் கற்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாணவரின் நாளாந்த பாடசாலையில் படிக்கும் தரத்திலேயே அவர்கள் தமிழ் வகுப்புக்களிலும் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களது தமிழ்மொழித் திறனுக்கேற்ற வகுப்புக்களில் அனுமதிக்கப்படுவதில்லை. ஆயினும் கல்வி ஆண்டுத் தொடக்கத்தில் உரிய வகுப்பில் மாணவர் அனுமதிக்கப்பட்டதும் அவர்களது மொழித்திறனை மதிப்பீடுசெய்து, அவர்களது மொழித் திறனுக்கேற்ப மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, அவர்களுக்கேற்ற பாடங்களைத் தயாரித்துக் கற்பிக்கும்போது அவர்கள் மகிழ்ச்சியாகக் கற்கத் தொடங்குகின்றனர்.

மாணவரது மொழித் திறன்களை வளர்க்கத் தக்க பயிற்சி நூல்கள் அவசியமானவை. பாடசாலைத் தமிழ் வகுப்புக்களில் வழங்கப்படும் பாடநூல்களில் வகுப்புக்களுக்கு ஏற்பத் தரமின்மை காணப்படுவதைக் குறித்துப் பெரும்பாலான பெற்றோர் பல ஆண்டுகளாகக் குறை கூறிய வண்ணமே உள்ளனர். மாணவர் தரத்துக்கு ஏற்றவகையில் எளிமையாகவும் கவர்ச்சியாகவும் இப்பாடநூல்களும் பயிற்சிகளும் தயாரிக்கப்பட வேண்டும். இந்நிலையில் தனிப்பட்ட முறையில் ஓரிரு தமிழாசிரியர்கள் தம் கற்பித்தல் அனுபவங்களுடன் வெளியிடும் தமிழ்ப் பயிற்சி நூல்களையே பெற்றோரும் ஆசிரியர்களும் பெரிதும் விரும்பிப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் குறிப்பிட வேண்டும். தமிழில் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் மாணவர் பேசுவதற்கேற்ற சூழலை வகுப்புக்களில் உருவாக்கிக்கொள்ளுதல் இன்றியமையாதது. கதை கூறல், உரையாடல், உரையாடி நடித்தல் போன்றவை இதற்குப் பெரிதும் உதவும் கற்பித்தல் நெறிகளாகும்.

ஆசிரியர்கள் கற்பிக்கும் விசேட பயிற்சி உடையோராக இருப்பது மட்டும் போதாது. அவர்கள் தமிழில் தம் அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் மாணவருக்குத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் தமிழர் பண்பாடு, வரலாறு

என்பன பற்றியும் கற்பிக்கும்போது அவர்களுக்குத் தமிழ்மீது கூடிய ஆர்வம் ஏற்படலாம். இதற்கு வாய்ப்பாக ஸ்காபரோவில் இயங்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகத்தில் தமிழ்மொழியில் BA., M.A பயிலக் கூடிய வாய்ப்பு வசதிகள் உள்ளன. பாடசாலைகளிலே தமிழ் கற்பிக்கும் சில ஆசிரியர்கள் BA., M.A வகுப்புக்களில் ஏற்கனவே கற்றுப் பட்டங்கள் பெற்றுச், சிறந்த ஆசிரியர்களாகத் திகழ்வதைப் பாராட்ட வேண்டும். இதன் மூலம் ஆசிரியர்கள் தம் தமிழ் அறிவை வளர்த்துக்கொள்வதோடு, மாணவருக்குச் சிறந்த முறையில் தமிழ் அறிவை ஊட்டுவதற்கும் வாய்ப்பாகின்றது.

பெற்றோர் பிள்ளைகளுக்கு நடனம், இசை முதலிய நுண்கலைகளைக் கற்பிப்பதில் மிகக் கூடிய அக்கறையுடையோராக உள்ளனர். ஆனால் நுண்கலைகளைப் பயிலும் பெரும்பாலான பிள்ளைகள் தமிழ்மொழித் திறன் அற்றவர்களாகவே உள்ளனர். இசை, நடன வகுப்புக்கள் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. நுண்கலை ஆசிரியர்கள் தமிழ்மொழிப் பற்றுடன் தமிழில் தம் போதனையை நடத்தினால் மாணவர்கள் தமிழ்மொழிமீது மேலும் அக்கறையும் ஆர்வமும் கொள்ள வாய்ப்புண்டு. ஏற்கனவே குறிப்பட்ட வாய்ப்புக்கள் வசதிகள் அனைத்தையும் பாலர் முதல் வளர்ந்தோர் வரை அக்கறையுடன் பயன்படுத்திக்கொண்டால், கனடாவில் தமிழ் அடுத்த தலைமுறைக்கும் நிலைத்திருக்கக் கூடியதோர் அரிய வாய்ப்பு உண்டாகும்.

...........................



# யோகாவில் இருதுளிகள்

யோகா அருள்சுப்பிரமணியம் **M.Sc.**

இப் பரந்து விரிந்து கிடக்கும் உலகில் உயிர் ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கும் யோகாவின் பெருமையை சொல்வதென்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதில் இரு துளிகளாக யோகாவில் தமிழையும் யோகாவின் பயன்கள் சிலவற்றையும் கோடிட்டுக் காட்ட விழைகின்றேன்.

யோகாவை எடுத்துக் கொண்டால் இன்று இந்த அவசரமான விஞ்ஞான உலகில் வாழ்க்கை ஓட்டத்தில் மனித மனம் பரபரப்பும் அமைதியற்றதுமான நிலையைக் கொண்டிருப்பதை நம்மால் கண்கூடாகக் காணமுடிகிறது. இதற்கு ஓர் தீர்வு காணமுடியாது மனிதன் தவித்துக் கொண்டிருக்கின்றான். இந்நிலையில் மனிதனுக்கு ஒரு அமைதி நிலையை ஏற்படுத்தும் அருமருந்தாக அமையக் கூடியது யோகா ஒன்றேயாகும். யோகா என்பது உடல், மனம் ஆன்மா என்பவற்றை இணைக்கும் ஓர் உன்னதமான பழமையான ஒரு கலையாகும். யோகாவைப் பலரும் சமயம் சார்ந்தது எனக் கருதுகினறனர். இது சமயங்களைக் கடந்தது. நாம் தொடர்ந்து யோகைவை இடைவிடாது செய்தால் நமக்குச் சாந்தமும் மனநிறைவும் கிடைக்கும். மனிதனது அக்கால வாழ்க்கையையும் இன்றைய கால வாழ்க்கையும் உற்று நோக்குவோமானால் அன்று பாரெங்கும் இயற்கை நமக்களித்த பூக்கள், தூயகாற்று, வளம் நிறைந்து வழிந்த நிலம், தெளிந்த நல்ல நீர், விலங்குகள் பறவைகள், எங்கு பார்த்தாலும் செடிகொடிகள் மரங்கள், எதைப் பார்த்தாலும் இயற்கையின் பசுமை இழைந்தோடிக் கொண்டிருந்த வாழ்வாக நிறைந்திருந்தது. ஆனால், இன்றோ நேர்மாறாக, செயற்கை தாண்டவமாடும் வாழ்வாக மாறிவிட்டது. இன்றைய நிலையில் இது தவிர்க்க முடியாத ஒன்று. மாற்றங்கள் ஏற்படும்போது அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அப்போதுதான் நாம் மனித வளர்ச்சிக்குத் துணைபோகும் மாந்தராக வாழமுடியும். ஆகவே நாம் பழைய கருத்துக்களைப் பேசிக் கொண்டே புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் சமுகத்தில் ஒரு சிறந்த வாழ்வினை வாழமுடியும்.

தமிழும் யோகாவும்:

தமிழும் யோகாவும் எனும் நோக்கில் ஒரு துளியினைக் குறிப்பிட விரும்புகின்றேன். சித்தர்களிற் பலரும் இலக்கணத்தில் நிலைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். யோகா வேறு, சித்தர்கள் வேறு எனப் பிரிக்கப்படாதிருந்தனர். ''சிறந்து மனத் தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தோன்'' என்று வால்மீகியார் குறிப்பிடுகின்றார். அந்நாளில் பதினெண் சித்தர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் யாரென்று பார்க்கின்,

1. நந்தி தேவர் 2. அகத்தியர் 3. திருமூலர் 4. போகநாதர் 5. கொங்கணவர் 6. மச்சமுனி 7. கோரக்நாதர்
8. சட்டமுனி 9. சுந்தரானந்தா 10. குதம்மை 11. கருவூரா 12. இடைக்காடர் 13. கமலமுனி 14. வால்மீகி 15. பதஞ்சலி
16. தவைந்தலி 17. பாம்பாட்டி 18 இராம தேவர்.

தமிழின் தொன்மையையும் விளக்கங்களையும் கூறும் இலக்கண நூலாம் தொல்காப்பியத்தை எழுதிய தொல்காப்பியர் தனது புறத்திணையியலில், ''மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்'' எனக் குறிப்பிட்டமையிலிருந்து சித்தர்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பது புலனாகிறது. அத்துடன் இதற்கு விளக்கம் கூறும்போதும் இதற்கு உரை எழுதிய நச்சினாக்கினியர் காமம் வெகுளி மயக்கம் இல்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்றும் மூவகைக் காலத்திலும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோன் என உரை எழுதி அறிவர் என்றுணர்க என விளக்கம் அளிக்கிறார். இதனால் அவர்தம் காலத்துச் சித்தர்கள் ''அறிவர்'' என அழைக்கப்பட்டமை புலனாகும். அத்துடன் இந்தச் சித்தர்கள் அனைவரும் மருத்தததுவத்துடன் இணைந்த அறிவுசால் சித்தர்களாக விளங்கியிருப்பினும் பலரும் தமிழுடன் இரண்டறக் கலந்து பல ஆக்கங்களை உருவாக்கியதை நாம் வரலாற்றின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே நம் தாய்மொழியாம் தமிழினைச் சித்தர்கள் பலரும் இலக்கணங்கள் படைத்து இன்பம் கண்டுள்ளனர் என்பதைப் பல நூல்களின் வாயிலாக அறிய முடிகின்றது. அவர்களும் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளனர் என்பது ஓர் வரலாற்றுச் சான்றாகும்.

**யோகாவின் பயன்கள்**

யோகாவின் பயன்களை எடுத்துக் கொண்டால் நாம் வியக்கக்கூடிய உளம்சார்ந்த பல நன்மைகள் அவற்றுள் புதைந்து

கிடப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆதி காலத்தில் 84 யோகாசனங்கள் வழக்கத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. கால ஓட்டத்தில் அவை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்து சில நூறு ஆசனங்களே இன்று பயிற்ச்சியில் இருந்து வருகினன்றன. ஆனால் நாம் மிகச் சில ஆசனங்களைப் பயிற்சி செய்வதின் மூலமும் சில மூச்சுப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வதன் மூலமும் நிறைந்த பயனைப் பெற முடியும். பணம் இருந்தால் நாம் எதையும் பெற்றுவிடலாம் என்று பலரும் நினைக்கின்றார்கள். ஆரோக்கியத்தை நாம் எதைக் கொடுத்தும் வாங்கிவிட முடியாது. ஆகவே ஆரோக்கியமான வாழ்வை நாம் பெற வேண்டுமாயின் அவசியமானது யோகா ஒன்றேயாகும். யோகா இரத்த அழுத்த நோயினைக் கட்டுப்படுத்துகிறது. இரத்த ஓட்டத்தினைச் சீர்படுத்துகிறது. நரம்பு சம்மந்தப்பட்ட அனைத்து நோய்களையும் குணமாக்குகிறது. நரம்பு மண்டலத்தின் இறுக்கத்தைக் குறைக்கின்றது. உடம்பிலுள்ள மூட்டுக்களைச் சீராக்க உதவுகின்றது. யோகா நோய் எதிர்ப்பு சக்திக்குப் புத்துணர்வு கொடுக்கின்றது. தோலில் ஏற்படும் நோய்கள் அனைத்தையும் நீக்குவதோடு தோலினைப் புதுப்பொலிவு பெறவைக்கின்றது. உடலின் நிறையைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. நீரழிவு நோய், மன இறுக்கம், மனச் சோர்வு, மன நோய், தைராய்டு, தைமஸ், கால்வருத்தங்கள், மனப் பயம் இவற்றிலிருந்து விலக்கி அமைதியான நித்திரையைக் கொடுத்து வாழ்வினை வளம் பெற வைக்கிறது. திருமூலர் சமாதி நிலையில் நின்று பாடிய 3000 பாடல்கள் மூலம் இவையனைத்தையும் அறிவுறுத்தியுள்ளார். தமிழ் மணம் கமழும் அவரது திருமந்திரத்தைப் படித்து உணர்ந்து பயன்பெற்று பெருவாழ்வு வாழ வேண்டு மென்பதே எனது பேரவா.

இத்தகைய பெருமை வாய்ந்த யோகாவினைப் பயின்று பட்டம் பெற்று ஏனையோருக்கும் அதைப் புகட்டி அனைவரது வாழ்வினையும் வளம் பெறவைக்கும் அண்ணாமலைக் கனடா வளாகம் என்றென்றும் வளர்ந்து மேலோங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



# தமிழ் - ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், சமூகம்

முனைவர். செல்வநாயகி ஸ்ரீதாஸ்
(விரிவுரையாளர், அண்ணாமலைக் கனடா வளாகம்)

தமிழ் ஆசிரியர்கள் என்றதும் எமக்குப் புராண காலத் துரோணாச்சாரியார் போன்றோர், நம் காலத்தில் வாழ்ந்திருந்த மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் (உவேசா), சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் போன்றோர், எமக்கு வழிகாட்டிகளாக இருந்த கல்லூரி ஆசிரியர்கள் நினைவிற்கு வருகிறார்கள். தள்ளாத வயதிலும் கிராமம் கிராமமாகச் சென்று, பலர் வீட்டுத் திண்ணைகளிலும் நாட்கணக்கில் காத்திருந்து, சங்க இலக்கிய ஏட்டுச் சுவடிப் பிரதிகளைப் பெற்று, அவற்றை நாம் இன்று காணும் வடிவில் சீர் செய்து கொடுத்த உவேசா போன்ற பெரியார் பலரை நம் வரலாறு காட்டி நிற்கிறது. ஆறுமுகநாவலர் இன்றேல் இன்று யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் காணாமற் போயிருக்கும். இவர்கள், தாம் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்லாது காலம் கடந்தும் தமிழை வாழ வைக்கும் மாணவர் குழாத்தை உருவாக்குவதில் அயராது பாடுபட்ட பெருமக்கள் வரிசைக்கு ஒரு சில உதாரணங்களே. மாணவர்கள் என்று பார்க்கும் போது, அருச்சுனன், ஏகலைவன் போன்றோரை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

காலம் மாறினாலும் தேவைகள் மாறவில்லை. தமிழ் வளர்க்க வேண்டிய தேவை தொடர்ந்தும் இருந்து கொண்டேயிருக்கிறது. காலத்தால் தமிழ் தனது தனித் தன்மையை இழந்து சிறுகச் சிறுக அழிந்து விடுமோ என்னும் பயம் தமிழ் அன்பர்கள் பலரதும் அடிமனத்தில் இருந்து கொண்டேயிருக்கிறது. "தமிழ் இனி மெல்லச் சாகும்" என்னும் வாசகத்தினை மீண்டும் மீண்டும் எம்மை அறியாமலே உருப்போடுகிறோம். உலக அளவில் இப் பிரச்சனை பூதாகாரமாக இருந்தாலும், இக் கட்டுரை, புலம் பெயர்ந்த நாடுகளில், அதிலும் குறிப்பாகக் கனடா நாட்டில் வாழும் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சனைகளை, ஆய்வதாகவே இருக்கும். இது பெரும்பாலும் ஏனைய நாடுகளுக்கும் பொருந்துவதாகவே இருக்கும்.

தமிழின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் தமிழ் ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர், தமிழ் அன்பர்கள், திட்டமிட்டுத் தமிழை வளர்த்தெடுக்கும் நிலையிலுள்ள சமூகப் பெரியார்கள், சமூகத் தாபனங்கள், புலம் பெயர்ந்து வாழும் நாட்டின் அரசியல் கொள்கைகள் என்று இப்படிப் பலரது பங்கும் ஒருமித்துக் காணப்படுகிறது. சந்தர்ப்பங்கள் நமக்குப் பலவகையிலும் சார்பாக இருந்தாலும், நாம் திட்டமிட்டுக் காய்களை நகர்த்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். மந்திரத்தால் மாங்காய் வரவழைப்பதற்கு நாம் புராண கால நாயகர்கள் அல்ல. சிவனே என்று சும்மா இருந்தாலும், தமிழ் மாணவர் சமூகம் தானாகவே உருவாகிடும் என்று எண்ணும் அளவுக்கு நாம் முட்டாள்களும் அல்ல. எதிர் நீச்சல் போடும் நிலையில் தான் நாம் இருக்கிறோம்.

கனடா ஒரு பல்லின பல்கலாச்சார நாடு. அரசு தன் பங்கிற்குப் பல்லின மக்களும் தத்தம் மொழி, பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதற்குப் போதிய சுதந்திரமும் வசதிகளும் கொடுத்திருக்கிறது. அதனை நாம் எந்த அளவுக்குப் பயன் படுத்துகிறோம் என்பதே முக்கிய விடயமாகும். கல்விச் சபையினால் பாரிய பொருட் செலவில் தமிழ் கல்வி கற்பதற்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அவரவர் வாழும் சுற்றாடலில் அமைந்திருக்கும் பாடசாலைகளில் தமிழ் வகுப்புக்கள் நடாத்துவதற்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பல பாடசாலைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். ஆனால் இப் பாடசாலைகள் பலவற்றில் மாணவர் பற்றாக் குறையால் தமிழ் வகுப்புக்களுக்கு மூடுவிழா நடைபெற்றதை நாம் அறிவோம். இதற்கு அரசு எவ்வகையிலும் பொறுப்பல்ல. நாமே தான் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும். தவறு எங்கே நடந்திருக்கிறது?

பெற்றோர்களைக் கேட்டால், ஆசிரியர்கள் சரியில்லை, அவர்கள் தமிழை முறையாகக் கற்றுத் தருவதில்லை, பிள்ளைகள் வீட்டிலேயே தமிழைக் கற்றுக் கொள்ளட்டும், அவர்களை வகுப்புக்கு அழைத்துச் செல்லும் சிரமமும் இல்லை என்கிறார்கள். அப்படியான வீடுகளில் தமிழ் கற்றுத் தரப் படுகின்றதா? பெற்றோர், தமது இனம், மொழி, பண்பாடு, முதலியவற்றைப் பிள்ளைகள் கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவற்றைக் கற்கவேண்டியதன் தேவையைப் பிள்ளைகளுக்கு உணர்த்தவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இனத்தின் அடையாளத்தைத் தொலைத்த நிலையில் வாழும் சமூகங்கள் எமக்குப் பாடமாக இருக்கவேண்டும். வாழ்வாதாரத்திற்காக, தென் ஆபிரிக்கா, பிஜி, கயானா, றினிடாட் போன்ற நாடுகளில் குடியேறிய தமிழர்களின் நிலையை நாம் இன்று, இங்கு காண்கிறோம். பல்கிரூன் ஆக மாறிய பாலகிருட்ணர்களைக்

கண்கூடாகக் காண்கிறோம். தமிழ் மொழியைக் கைவிடுவதால் தமிழ் இனம் வெள்ளை இனமாக மாறிவிட முடியாது. பல்லாயிரம் ஆண்டுப் பழமையும் பாரம்பரியமும் மிக்கது எமது மொழி என்று கூறுவதிலுள்ள பெருமையை மாணவர்கள் உணர்வார்களேயானால் இத்தகைய தவறுகள் நேர வாய்ப்பே இல்லை.

மாணவர்கள் தமிழ் வகுப்புக்களுக்கு வராமைக்கு ஆசிரியர்கள் காரணம் என்றால், அந்த ஆசிரியர்கள் தரத்தை உயர்த்த நாம் முயல வேண்டுமே ஒழிய வகுப்பைத் தவிர்ப்பது தீர்வாகாது. இன்று எம் மத்தியில் பணி புரியும் தமிழ் ஆசிரியர்களைப் பல பிரிவுகளுள் அடக்கலாம்.

1. ஐம்பது வயதைக் கடந்த, தமிழ் கற்பிக்கும் தராதரமும் பயிற்சியும் பெற்ற முதிய தலைமுறையினர்.
2. தமிழ் கற்பிக்கும் தராதரமும் பயிற்சியும் பெற்ற நடுத்தர வயதினர்.
3. புலம் பெயர் நாடுகளில் தமிழ் கற்பித்தலைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்ட நடுத்தர வயதினரான ஒரு பிரிவினர். இவர்கள் பெரும்பாலும் பட்டப்படிப்போ அல்லது ஆசிரியர் பயிற்சியோ அற்றவர்கள். பெரும்பாலும் தமிழ் 12 ஆம் வகுப்பு வரை பயின்றவர்கள்.
4. தமிழ் கற்பிக்கும் தகுதியும் பயிற்சியும் பெற்ற இளவயதினர்.

மேலே குறிப்பிடப்பட்ட பிரிவு ஒரு குத்து மதிப்பானதே. முதலாம் இரண்டாம் பிரிவினர் பணியில் இருக்கும் காலம் தமிழ் கல்வி ஓரளவு சுமூகமாக நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம். இந்தத் தலைமுறையினர், மாணவர் விடயத்தில் பெரும்பாலும் பொறுப்பாக நடந்து கொள்பவர்கள். இவர்கள், அதாவது தமிழைக் கற்பிப்பதை ஒரு உயரிய கடமையாக் கொண்டு உழைக்கும் பரம்பரையின் சேவைக் காலம் முடிந்த பின்னுள்ள காலம் மிகவும் மங்கலாகக் காட்சி தருகிறது.

மூன்றாம் நிலையில் உள்ளவர்கள் தமது கல்வித் தராதரத்தையும் பயிற்சியையும் முறையாக முடித்தால் ஒழிய அவர்களால் இப் பாரிய பொறுப்பை முறையாக ஆற்றமுடியாது. இவர்கள் தம்மை இப் பொறுப்புக்கு உரியவர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டும். அதற்குரிய வசதிகளும் வாய்ப்புக்களும் கனடா நாட்டில் அதிகமாகவே இருக்கின்றன. அண்ணாமலைக் கனடா வளாகத்தில் இளங்கலை (பி. ஏ) வகுப்புக்கள் மிகச் சிறப்பாக நடாத்தப்படுகின்றன. மிசிசாகா, பிறம்றன் போன்ற தொலைவில் வசிக்கும் மாணவர்களின் வசதிக்காக Skype மூலமாகவும் பெரும்பாலான வகுப்புக்கள் நடாத்தப்படும்.

நான்காம் பிரிவில் அடங்கும் தகுதியும் பயிற்சியும் பெற்ற இளம் தலைமுறையினர் மிக மிக அரிதாகவே உள்ளனர். அண்ணாமலைக் கனடா வளாகத்தில் இளங்கலை முதுகலை பயிலும் இளவயதினர், கனடா வாழ் தமிழரின் கல்வித் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு இல்லை என்றே கூறவேண்டும். கனடாவில் பிறந்து வளர்ந்த சிறார்கள் பலர் இப் பிரிவில் தம்மைத் தயார் படுத்திக் கொள்ளாவிட்டால் தமிழின் எதிர்காலம் கனடாவில் கேள்விக் குறியாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

தொலை நோக்கில் கனடாவில் தமிழ் என்னும் விடயத்தில் சமூகத்தின் பங்கு பாரியது. சமூகம் விளித்துக் கொண்டு ஒற்றுமையாகச் செயற்படாவிட்டால் கனடாவில் தமிழ் மெல்லச் சாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டிய தருணம் வந்து விட்டது. இப் பயங்கரமான விளைவுக்கு ஆசிரியர் சமூகம், மாணவர் சமூகம், பெற்றோர், சமூகப் பெரியார்கள், தமிழ் கல்வித் தாபனங்கள், தமிழுக்கு உரிமை கோரும் தாபனங்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டி நேரிடும்.

தமிழ் கனடாவில் தங்குமா தாழுமா என்பதை நாமே தீர்மானிக்கவேண்டும்.

# விதை

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

கல்விப் பணிக்குத் தீனியிடும்
கனடா அண்ணா மலைவளாகம்
நல்ல விதைகளை நாட்டுவதால்
நாளை அதன்பயன் பெரிதாகும்.!

மண்ணிற் போட்ட விதையெல்லாம்
மரமாய் முளைத்து வருவதில்லை
மரமாய் வளர்ந்த அவையெல்லாம்
மலர்ந்து பூக்கள் தருவதில்லை

பூத்த பூக்கள் எல்லாமே
காய்த்து மரத்திற் தொங்காது
காய்த்த காய்கள் எல்லாமே
கனிந்து பிறர்க்கு உதவிடுமா?

கனிந்த போதும் கனியெல்லாம்
மனிதர்க் குணவாய் ஆவதில்லை
மனிதர்க் குள்ளும் இக்கதைதான்
மறைவாய் உள்ளது அறிந்திடுவோம்!

பூவும் காயும் கனியெல்லாம்
புவியில் அதனதன் பயன்பாட்டை
மேவும் போதே அவைபாரில்
மேன்மை அடையும் அறிந்திடுவோம்!

அடுத்தவர் உனது பணியென்ற
அருங்கனி யுண்டு பயன்பெறவே
எடுத்திடும் முயற்சி இவ்வுலகில்
என்றும் நிலைக்கும் நீயறிவாய்!

இந்தப் பணியைக் கனடாவில்
இனிதே ஆற்றிக் கற்போரை
முந்திக் கவரும் வளாகத்தின்
முயற்சி நீடு வாழியவே!
கனடா வளாகம் விதைக்கின்ற
கல்வி சார்ந்த முளையெல்லாம்
வனமாய் அடர்ந்து வளர்ந்திங்கு
வளந்தர வேண்டி வாழ்த்துகிறேன்!!

# சைவத் தமிழ்ப் பண்பாட்டின் இன்றைய நிலையும் எதிர்காலமும்

கலாவித்தகர் திருமதி உமா சூரியகுமார், எம். ஏ.

மக்களின் ஒழுக்கம், நீதி, நேர்மை, அறம் முதலியற்றின் கூட்டுக்குணமே பண்பாடு எனப்படும். இது சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும் உலக ஒழுக்கங்களையும் அதற்கேற்ப நடப்பதனையும் குறிக்கும். அவ்வித பண்பாட்டிற்கு மனிதனை ஏற்றம்பெற வைத்த பண்புகள் இரண்டு. அவையாவன: மொழியும், சமயம் எனும் கடவுள் கொள்கையுமாகும். இவை இரண்டையும் இரு கண்கள் போலப் போற்றி வாழ்பவனே உண்மையான பண்பாட்டு விழுமியங்களுக்கு உரிமையுடையவனாவான். சங்கப்புலவர் நல்லந்துவனார், ''பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'' எனக் குறிப்பிடுகின்றார். பொதுவாக உலகியலில் பண்பாடென்பது நற்செயல் நல்லொழுக்கங்களையே குறிக்கின்றது. தமிழ்க் கலைக்களஞ்சியம் 'ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்வியலை நடத்தும் முறையே பண்பாடு' என வரைவிலக்கணம் கூறுகிறது. இதுதான் மானிடவியல் அல்லது சமூகவியல் பண்பாட்டுக்குக் கூறும் இலக்கணமுமாகும். இதனைத் திருவள்ளுவரும்,

"பண்புடையார் பட்டுண்டு உலகம்'' என்றும்,

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையார் தொடர்பு"

என்றும் குறிப்பிடுகின்றார். இப்பண்பாடானது இடம் சூழ்நிலை, சேர்க்கை முதலியவற்றால் மாறும் தன்மையுடையது. நல்லிடம், நற்சூழல் அமையுமாயின் உயர்ந்த பண்பாடு உடையவராகத் திகழலாம். இவ்விடத்தில் மக்கள் அறிந்தவற்றுள்ளே மேன்மையானவற்றாலும் சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் பண்பாட்டின் தன்மை அறியப்படுகின்றது எனப் பண்பாடு பற்றி மேலைநாட்டறிஞர் கூறும் கருத்து மனங்கொளத்தக்கதாகும்.

இன்று கல்வியறிவு, தொழில்நுட்ப அறிவு என்பவற்றின் வளர்சி காரணமாக மிக உயர்ந்த பண்பாட்டுக்கு உரியவர்களாகிய நாம் அவற்றையெல்லாம் கைநழுவவிட்டு நமது சுயத்தை, இருப்பை தனித்துவத்தை இழந்து வருகின்றோம். இந்த கால கட்டத்தில் நமது பண்பாடு எது, அதன் இன்றைய நிலை என்ன, உண்மையான பண்பாட்டைப் பேணுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்து செயற்பட வேண்டிய நிலையிலுள்ளோம்.

நாவலர் பெருமானுக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியது. அவ்வேளை அவர் அங்கு செய்த பிரசங்கத்தின் முகவுரையாக அவர் குறிப்பிட்டதை இங்கு சிந்தித்தல் பொருத்தமாகும். ''தங்கள் தங்கள் சமயம் இது எனவும், அதற்குரிய கடவுளர் இவர் எனவும், அக்கடவுள் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளும் முறைமை இது எனவும், அவரை ஆன்மாக்கள் வழிபடும் முறைமை இது எனவும், அறிதலும் அறிந்தபடி அனுட்டித்தலும் எல்லாச் சமயத்தாருக்கும் கடனாகும்'' என்பதாகும். எமது சமயம் சைவம் என்பதும் எமது கடவுள் சிவபெருமான் என்பதும், எமது மொழி செம்மொழியான தமிழ் மொழி என்பதும், எமது பண்பாடு சைவத்தமிழ் பண்பாடு என்பதும் நம்மவர் பலருக்கு மயக்கத்திற்கு உரியதாயிற்று. வேறுவேறு நாடுகளில் வேறு இனத்தவரின் கடவுள் கொள்கைகள் பண்பாடுகள் நமக்குள் புகுந்தவையே இதற்குக் காரணமாயிற்று.

ஒரு சமூகத்தினுடைய பண்பாடானது அம்மக்களின் பெயர்கள், உணவு, உடை, வாழ்வியல், சமயச்சின்னங்கள், விசேடதினங்கள், விழாக்கள், கலைகள், இலக்கியங்கள், வாழ்வின் பயன் இவை எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டதாகும்.

ஒருவருடைய பெயரினைக்கொண்டுதான் அவர் எந்த மொழி இனம் சமயத்தை சார்ந்தவர் என்பதை இனங்காண முடியும். நமது முன்னோர்கள் வழங்கிய பெயர்கள் அத்தன்மையனவாகவே இருந்தன. எமது பண்பாட்டில் நாமாவளி பாடி வழிபடுவது வேதகாலம் முதல் இடம்பெற்று வரும் மரபாகும். இறைவனதோ மனிதனதோ பெயரைத் திரும்ப திரும்பச் சொல்லும்போது அவர்களுக்குரிய பண்பை உச்சரிப்பவர் பெற்று விடுகின்றனர். ஆனால் இன்று பலர் பண்பாட்டுப் பெயர்களை மறந்து, அன்னிய மோகத்திற்கு அடிமையாகி, பிள்ளைகளுக்குப் பொருளற்ற பெயர்களை வைப்பது பண்பாட்டினைச் சிதைக்கும் செயலாகவே கருத வைக்கிறது.

பண்பாட்டுக் கூறுகளுள் முக்கியமானது உணவு, உடை, உறையுள் என்பவையாகும். சைவத் தமிழ்ப்

பண்பாட்டினரின் உணவு சைவம் அதாவது புலால் இல்லாதது. பஞ்சமாபாதகங்களைத் தன்னகத்தே விலத்தி கருணை வடிவான சீவகாரண்யமுள்ள கடவுளை முழுமுதலாக கொண்ட சைவசமயிகள் அசைவ உணவைவிடுத்து உடற்பிணி நீக்கவல்ல சைவஉணவினை உண்டு அறிவிற்கு உயிர்கொடுத்து நமது பண்பாட்டின் மேன்மையையும் சிறப்பையும் பிறர் உணரும் வகையில் முன்னோடிகளாக விளங்க வேண்டும்.

ஒருவனுடைய உடையைக் கொண்டு அவன் எந்த பண்பாட்டுக்கு உரியவன் என்பதனை அடையாளம் காணமுடியும். உலகின் பல்வேறு இன மக்களும் தத்தம இனத்தை பிரதிபலிக்கும் உடைகளை அணிவதைப் பார்க்கின்றோம். தொழிலின் நிமித்தம் அவ்வப்போது பிற உடைகளை அணிந்தாலும் எங்கள் மங்கல வைபவங்கள் ஆலய விழாக்கள் போன்றவற்றில் சைவத்தமிழ் பண்பாட்டு உடைகளைக் கட்டாயமாக அணிய வேண்டும். இல்லையேல் எமது சமயம் எது நாம் எந்த மொழியினர் எந்த பண்பாட்டுக்குரியவர் என்ற அடையாளத்தையே இழந்து விடுவோம்.

உயிர் வாழ்வதற்கு உடல்போல உடல் வாழ்வதற்கு உரியது இல்லம். ‘‘இல்லம்’’ என்பது ‘‘வீடு’’ என்ற மறுபெயராலும் அழைக்கப்படும். நமது சைவப் பண்பாட்டில் வீடு என்ற சொல் வாழ்வின் முடிவில் பெற வேண்டிய முத்திப்பேற்றறைக் குறிக்கின்றது. எனவே நாம் வாழும் வீடும் முத்திப் பேற்றுக்கு வழிகாட்டும் பண்புகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். மேலும், சைவவாழ்வியலில் ஆலய வழிபாடு, சமயதீட்சை, சிவசின்னங்கள், கிரியைகள் என்பன உள்ளடங்குகின்றன. கடவுள் வழிபாடு மக்களை நல்வாழ்வுக்கு வழிப்படுத்தும் என்பதனை மெய்கண்டார் தமது சிவஞானபோத நூலில்

‘‘மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே’’ என்கின்றார்.

வாழ்வியலில் நாம் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு விரதமும் விழாவும் சடங்குகளும் அவற்றின் உட்பொருளை விளக்கத்தக்க வகையில் செய்யப்படவேண்டும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிவகுப்பது கிரியைகளாகும். திசையறிகருவி திசை காட்டுவது போல உண்மையான வாழ்க்கையின் திசை காட்டும் கருவிதான் சமயம் எனின் மிகையில்லை. சமய வாழ்வியலை மேன்மையடைவதற்கான சாதனங்களே கிரியைகள் ஆகும். உயர்ந்த தத்துவநோக்கோடு விளங்குவது நமது சைவத்தமிழ் பண்பாடு. எவ்வளவு பண்படுத்தப்பட்ட நிலமானாலும் அதனை தொடர்ந்து பேணாது விட்டால் பற்றை செடி முளைத்துப் பாளாகிப் போய்விடும் அதிலிருந்து சரியான விளைவைப் பெறமுடியாது. அதேபோன்றுதான் பண்பாடும் தொடர்ந்து பேணாது விட்டால் அது சீர்குலைந்து செம்மை இழந்து வேண்டத்தகாத பழக்கவழக்கங்கள் மலிந்து நாட்டினையும் மக்களையும் நிலைதடுமாறச் செய்துவிடும்.

இன்றைய எமது நிலை இதுதான். மிக உயர்ந்த பண்பாட்டிற்கு உரியவர்களாகிய நாம் அவற்றையெல்லாம் கைநழுவ விட்டு எமது தனித்துவத்தை இழந்து வருகின்றோம். இதே தடத்தில் எமது பண்பாடு செல்லுமாயின் நிச்சயமாக காலவெள்ளோட்டத்தில் எதிர்நீச்சல் போடமுடியாமல் போய்விடும். பண்பாடு என்பது காலத்திற்கு காலம் மாற்றமடையும். அதாவது நெகிழ்ச்சித் தன்மையுடையதாகும். மனித விருத்தியின் காரணமாக பண்பாட்டுப் புறழ்வு ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் அதை பண்பாட்டுச் சிதைவாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பதே நமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எனவே இனிவரும் காலங்களிலாவது எமது தவறுகளை உணர்ந்து பிற பண்பாடுகள் எமது பண்பாட்டை மூடிவிடுமளவிற்கு இடமளிக்காது எமது பண்பாடு தனித்துவமானது, புனிதமானது அது பிறிதொருவரால் பகிரவோ அபகரிக்கவோ முடியாதது என்பதனை அனைவருக்கும் தெளிவுறுத்தும் படியாக வாழ்க்கையில் நல்ல வண்ணம் வாழ வேண்டிய கடமை கட்டாயம் சைவசமயத்தை சார்ந்த தமிழர் அனைவருக்கும் உண்டு என்பதனை வாழ்க்கையின் ஒவ்வொரு நகர்விலும் சிந்திக் வேண்டும். அவ்பொழுதுதான் எமது பண்பாடு என்றும் வளமானதாக பேணப்படும்.

# Tamil and English learning - A comparative overview

**Siva Sinniah,** Letcurer, Annamalai Canada Campus

I have been toying with this topic for some time now hence I venture out to do a cursory analysis of it. I am not a linguist but have the ability to write this article because of my knowledge and experience in teaching both languages in high schools and colleges. I will only be pointing out the salient features of both languages since I have been requested not to exceed two pages.

The antiquity of Tamil is documented to be around eight thousand years. The following poem in Tholkappiyam, the oldest grammar book ( 5th Century B.E ), available speaks about the various aspects of a verse including rhymes ,alliterations and other prosodic features.

மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐ ஈர் ஆயிரத்து ஆறு ஐஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக் குறை எழுநூற்று
ஒன்ப:து என்ப உணர்ந்திசி னோரே ( தொல் 1358 )

A language must have a rich literary background and a long tradition of at least four to five thousand years of history, to speak of the aspects of a verse . Hence Linguists are of the opinion that Tamil must have had its origin , at least eight thousand years ago. Hence it is inferred that it is older than English . It is also agreed by many archeologists that Tamil was the language of Mohanjadaro and Harappa civilizations and it was spoken all over India and is the root of many world languages.

There is a myth among the younger generations of Diaspora Tamils that Tamil is a difficult language to learn because it has 247 alphabet. Tamil has 12 vowels and 18 consonants and English has 5 vowels and 21 consonants. The rest of the Tamil alphabets are the cmpound letters formed by the vowels and consonants (12x18=216) +12 +18 +1 ayutha letter ∴ for the 'ha' sound for easy use of the learner. This special feature is not available in English since it has a very flexible combinations of both forms depending on the nature of the word .

The 12 vowels in Tamil are called Uyir (உயிர்) meaning life and consonants as Mei (மெய்) meaning body. Hence the compound letters are called UYIRMEI (உயிர் மெய்). Tamil is strictly bound by grammatical rules and there are a few irregularities. Furthermore what you write is pronounced letter by letter and there are no silent letters but the volume of pronunciation may vary according to the word. Hence it is a phonetic language. In English there are so many variations in pronunciation and it will be a challenge to a second language learner. The pronunciation and spelling must be learnt with great care.

A few Examples; Lieutenant - In UK it is pronounced as "leftinent" but in Canada and America it is "liutinant".

debt - pronounced as "det" b is silent.
receipt - pronounced as 'riseet - p is silent.
humour - pronounced as humer .
mourning - pronounced as moning - r is silent.
bow - pronounced as bov - also bo

bought - pronounced as "bo-t" bo-t
borough - boro
Trough - truf
sandwich - sandvich
Greenwitch -- kreenich
rear -- riyar
rare -- reyar

Like this there are so many irregularities in pronunciation and spelling .

The letters e & I , a & o ,v & w are pronounced differently in different contexts without any set rules.

In Tamil we have எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. with set sound forms, making it easier to the learner.

**Grammar** - This section is a difficult part of any language and most of the learners hate or avoid learning this part. But you must understand that grammar is the backbone of any language for its continuity and longevity .

**1. Tense ,aspect and mood** - English has large number of these forms with subtle ( b is silent )differences Eg: Simple Past - "I ate" and the Present Perfect - "I have eaten " . Also progressive and perfect progressive forms add complexity to the learner.

**2. Modal verbs** (துணை வினைகள்) - English has several modal auxiliary verbs, which has a number of uses. These verbs convey a special sense or mood such as obligation, necessity, ability, probability, permission, possibility, prohibition, intention etc. These include "must", "can", "have to", "need to", "will", "shall", "ought to", "will have to", "may", and "might".

For example, the opposite of "You must be here at 8" (obligation) is usually "You don't have to be here at 8" (lack of obligation, choice). "Must" in "You must not drink the water" (prohibition) has a different meaning from "must" in "You must have eaten the chocolate" (deduction). This complexity takes considerable work for most English language learners to master.

All these modal verbs or "modals" take the first form of the verb after them. These modals (most of them) do not have past or future inflection, i.e. they do not have past or future tense (exceptions being *have to* and *need to*). (Wikepedia)

**3. Functions of auxiliaries** Learners of English tend to find it difficult to manipulate the various ways in which English uses auxiliary verbs. These include negation (e.g. *He hasn't been drinking.*), inversion with the subject to form a question (e.g. *Has he been drinking?*), short answers (e.g. *Yes, he has.*) and tag questions (*has he?*). A further complication is that the dummy auxiliary verb *do /does /did* is added to fulfil these functions in the simple present and simple past, but not to replace the verb *to be* (*He drinks too much./Does he?* but *He is an addict/Is he?*). ( Wikepedia )

**4. Use of Prepositions** (முன்னிடைச் சொற்கள் ) - Learn the correct usage of this since it is an integral part of the language .

**5. Punctuations.** - This is a new introduction to Tamil since early Tamil writings were mostly in the verse form devoid of any punctuation marks and with the introduction of prose form by Arumuka Navalar, this was introduced in the 19th century and has been in practice ever since.

**6. Use of Capital letters** - This is not found in Tamil and no one need to worry about it.

**7. Irregular Verbs**: There is no set rule hence the second language learner must rote learn these forms . A few Egs:

| Root form | Past Tense | Past Participle |
|---|---|---|
| arise | arose | arisen |
| be | was, were | been |
| beat | beat | beaten |
| blow | blew | blown |

There are so many other similarities and difference but I have pointed out the important ones only. I remember a scholar saying that it is very easy to learn English but very difficult to master it.

.

JRS College of Business and Health Care Inc.



Diploma Programs

- Community Service Worker (mandatory co-op)
- Accounting & Payroll Administration (optional co-op)
- Pharmacy Assistant (mandatory co-op)
- Health Office Administrator (optional co-op)
- Early Childcare Assistant (mandatory co-op)
- Personal Support Worker (mandatory co-op)
- Computerized Accounting (optional co-op)
- Office Assistant (optional co-op)
- Computer Networking and Security (optional co-op)

Certificate Courses

- Cashier Training
- Bank Teller
- Payroll
- Business Communication Class
- QuickBooks
- MS Office
- AccPac
- Food Handling Training
- Food Service Worker
- Simply Accounting





# MOTIVATING CHILDREN TO LEARN MUSIC & DANCE

**Kalaimamani Dr.Subhashini Chandrasekaran,**
Asst.Professor (Nattuvangam), Dept of Music, Annamalai University.



Today's world we are living in is highly competative. The competition is so high that the pressure to succeed permeates on all aspects of our lives. This competitions impacts our economical, spritual, philosophical, physical and emotional aspects so much so that we are involuntarily forced to run criss-cross in madness without any value adding objective what so ever, while many recent researches see this as a sign of danger, the non-availability of quality choices make living a very poor quality affair.

To improve the quality of our mental and emotional stature, we are today bereft of choices. Sports, which can be one option, is in the possession of people who are economically top class and who can pull string from the influential quarters. Music and Dance are the other stress relievers. But it is said to note that both these are only treated as a decorative performing art, thus negating the very soul of these art forms. The depths of the spiritual concepts of these arts have been by far and large lost and they are being practised only at a very superficial and mundane level.

Whaterver is the reality, even today, admist all the above circumstances, one area that has been available even to the deprived class in Fine arts (in particular Dance and Music). Dance (in Particular Bharathanatyam) and Music do not see economical cadre, class in society, origin etc.

Dance and Music are like a virus. Virus, that has had its impact on so many generations before us. This, not only helped them to maintain a good physical health but also enhanced their mental health. They were mentally distracted as well as focussed at the same time. One may think queer reading the contradiction in the earlier sentence. But that was the reality. Dance and Music kept the earlier generations distracted from their problems and focussed in their moving forward in life. This only proved that Dance and Music is an emotional journey. Both these make people feel unfelt emotions in unimaginable ways. All these which appear mere words will bear more clarity when explained pragmatically.

**Music and Dance- Enrichens the soul**

The Upanishads say, " Devo Bhuta Devam Jajet" meaning " Become a God in order to worship God". In olden days, we had the practice of deticating all the best things to God, Bharathanatiyam and Carnatic music was considered as the best of all.

According to Shastra, " There is no wisdom, nor knowledge; no art nor craft; no device; nor action that is not to be found in Natya and Sangeetham".

Brahma created these two art forms aiming to reach them even to the masses who find it difficult to comprehend the moral and spiritual truths in a philosophical form. The effort was to reach out to the souls of diverse public, irrespective of their caste, creed, community, education levels and background through Bhavas – Physical and Voice.

An ardent observer of Bharathanatyam will approve the fact that it forms movement in straight line or Triangles or in circles. Patterns formed through such movements are mystic in nature. The mystic shapes or forms are also called mandalas and are associated wih the six chakras of the Human psychic Energy Body. This body is nothing but our soul, which is the actual "We" helping us to gain divine energy.Music and Dance is the way with which " the body, mind and soul pray to the Divine" . Since it directly relates to soul.

**Music and Dance – Enhances Performance**

**Developmental Psychology** which deals with growth patterns of human right from the prenatal stage till old age emphasizes brain development continues for many years after birth. Music and Dance training, in particular, develops the left side of the brain which processes language.

**Today's education systems** demands children to think creatively and be a multiple solution provider to a given situation. Dance and Music, by virtue of their versatile nature, enhances creative thinking and multitasking capacities. Children learning Music and Dance become creative thinkers also because, while singing or dancing, the artist need to exert such high command over their mind to travel length, breadth and depth into the art.

**Big corporates** today expect a lot of management attributes right when their prospective employee is out from school level. One of the major attributes expected is the ability to work in teams - Team work. Music and Dance, being a group effort, teaches children to respect other across diverse capabilities and levels as opposed to development of greed and a "Me first" altitude, which on the long run affects their career.

**Today's youth mantra seems to be socialising**

Children who do not socialize are left out of the race rulthlessly. Music and Dance art forms make even children who are born loners to socialize in acceptable and necessary levels, breaking their inborn limitations in socializing . Socializing is one of the key attributes to improve our network and a strong network automatically leads to success.

**Music and Dance – Helps quality Parenting**

Music and Dance, the two diving art forms, demands things that are not only physical but emotional too. Sometime they are expected to stretch their internal resources, so much thay they get automatically trained 'Being Awake' or 'Being Concious' than living in an imaginary world. This helps children learning these fine arts right from their young age to put their foot firm on the ground in life, across situations to find pragmatic solutions and not emotional fools.

**Music and Dance – Improves overall health**

Music and Dance offers a lot of health benefits to the performing artists, particularly, the mudras in Bharathanatyam is made complete by bringing together acupressure points at various sites on the human body. Mudras create increasing or impeding circulation of the blood or lymph into various vital organs. Mudras can control every organ and function of the body and mind, moving energy through the physical nervous system. The Mudras and foot work extracts energy and substances from the nerves and vital bodies producing the various enzymes and harmones needed for vibrant health. The soulfulness Music and Dance art forms permeate, enables mind and body co-ordination amplifying healthy mental stature.

Both these are forms takes care of maintaining a healthy mental stature by consistently excuding happiness, fun, pleasure and entertainment not only to the performers but also to the audience.

Bharathanatyam is a boon since it shapes the body into graceful controlled beauty, the mind into alertness and sensitivity and the emotions into controlled and purified receptors for the deepest inner longings of humankind.

**The final word.**

Right from the birth of the humankind. We have been in search for a union with the divine. Practically speaking we have been in search of peace of mind and success on all gamuts of life.

The current generation of elders in each household, I am sure realize that both of these arts form evolutionary sciences for the spiritual evolution of the human being to the state of the super human and finally the Divine.

Music and Dance grooms each one into a good human being, making their life, thinking and stature a divine one Every parent must get their children into these arts that help us to divinize ourselves, to develop spiritual qualities of loyality, fidelity, a sense of dharma, discipline, awareness, sensitivity, strength, courage, skill, co-operation, diligence, health, happiness and well being, serenity and peacefulness of mind.



# இழப்பும் இருப்பும்

**பொன்னையா விவேகானந்தன். எம். ஏ.**

**விரிவுரையாளர், அண்ணாமலைக் கனடா வளாகம்**

இந்நிலமே எம் நிரந்தர வாழிடம் என்ற யாதார்த்தநிலையை பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டு விட்டனர். விடுமுறைகாலத்தில் சுற்றுலாவுக்காகச் சென்று வருகின்ற இடமாகவே தாயகங்களைக் பெரிதும் கருத ஆரம்பித்துவிட்டனர். தொடக்க காலத்தில் 'தாயகச் சூழல் வாய்ப்பாக இருந்தால் அங்கேயே மீளவும் குடியேற வேண்டும்' எனக் கருதிய பலரும் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டனர்.

பழக்கப்பட்டுவிட்ட வாழ்க்கையும் அங்கு பெறமுடியாத வசதிகளும் இந்த மண்ணே நிரந்தரம் என்ற உணர்வை வலுப்படுத்தி விட்டன. இம்மண்ணோடான கால் நூற்றாண்டு வாழ்வின் வழியே உருவான புதிய தலைமுறைகள் தமது தலைமுறைத் தொடர்ச்சியின் தாயகம் இம்மண்தான் என உறுதியாக நம்புகின்றன.
இதன்வழியே நிரந்தரமான 'கனடாத் தமிழ்ச் சமூகம்' உருவாகிவிட்டதை அனைவரும் ஏற்றுக் கொண்டு விட்டனர்.

இயற்பியல், காலநிலை, பண்பாட்டு அமைவுகளில் முற்றிலும் மாறுபட்ட ஒரு தளத்தில் தனித்துவ அடையாளங்களைக் கொண்ட ஓர் இனமானது தன்னை நிரந்தரமாக நிலைநிறுத்த முற்படுவதானது சவால்கள் நிறைந்த ஒரு செயற்பாடாகும். பொருளாதாரம், அடையாளப் பேணல், பல்பண்பாட்டு ஒருங்கிணைவு, அரசியல் போன்ற தளங்களின் வழியே ஓரினமானது இருப்பை நிலைநிறுத்த முயல்வது இயல்பாகவோ தற்செயலாகவோ நிகழ்வதல்ல. நிறுவன இயல்பு கொண்ட, நன்கு திட்டமிட்ட, நீண்டகால நோக்கங்களை இலக்குகளாகக் கொண்ட ஒரு சமூகத்தின் ஒருங்கிணைந்த நகர்வே இந்த நிலத்திலான நிரந்தர இருப்பை வெற்றிகரமானதாக்க முடியும்.

எமது கடந்த கால் நூற்றாண்டு வாழ்வு இவ்வாறு எதிர்கால இலக்குகள் சுமந்து நகர்ந்ததா? தாயகப் போராட்டச் சூழலுக்கும் பொருளாதாரப் போராட்டங்களுக்கும் பெரிதும் முகம் கொடுத்த நாம் எம் எதிர்கால இருப்பைச் சரிவரத் திட்டமிடத் தவறிவிட்டோம் என்பதே உண்மை. பேணப்பட்டிருக்க வேண்டிய பல உன்னதமான இயல்புகளை, பண்பாட்டு விழுமியங்களைக் கடந்த காலங்களில் நாம் இழந்து விட்டிருக்கின்றோம்.

புதிய தலைமுறைகளின் மொழிப் பயன்பாடு அருகி வருகின்றது. ஆழமான பொருள் பொதிந்த சடங்குகளும் சம்பிரதாயங்களும் உருமாறி வருகின்றன.

பெரியோரை மதித்தல், விருந்தினர் பேணல், இயலாதோருக்கு உதவுதல் என்ற தமிழருக்கே உரித்தான பண்பாட்டு மரபுகள் வழக்கொழிந்து வருகின்றன. உறவினரோடு, இனத்தோடு ஒட்டி வாழ்கின்ற போக்கு நலிவடைந்து வருகின்றது.

குறித்த சில கலைகள் தவிர, இன அடையாளத்தை வெளிப்படுத்தும் கிராமியக் கலைகள் பெரிதும் போற்றப்படுவதில்லை. இவ்வாறான போக்குகளின் தொடர்ச்சி, அடையாளமிழந்த தமிழ்ச் சமூகத்தை உருவாக்குமே தவிர காத்திரமான இன இருப்புக்கு உதவாது.

வலுவான எதிர்காலச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான காலம் இப்போதும் இருக்கின்றது. அதற்கான வல்லமை கொண்டோரும் உள்ளனர்.

இதனை நடைமுறைப்படுத்தவல்ல ஒருங்கிணைந்த சமூகத்தளம் இன்றில்லையே என்பதுதான் எம்மவரின் பெருங்குறைபாடாக உள்ளது.

இளைய தலைமுறையேனும் இது பற்றி விழிப்புணர்வு கொள்ளுமா?

# எங்கும் வளர்ப்போம் எம் தமிழை

**இராஜ்மீரா இராசையா, M.A.**

செந்தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ், முத்தமிழ் என்றெல்லாம் போற்றப்படும் நந்தமிழ் முச்சங்கம் அமைத்து வளர்க்கப்பட்டது. மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியரால் போற்றிப் பாதுகாக்கப்பட்டது. மூவாயிரம் ஆண்டின் முன்னரேயே இலக்கிய வளமும் இலக்கண வளமும் கண்டது. மொழிக்கு மட்டுமன்றி வாழ்விற்கும் இலக்கணம் கூறும் உன்னத மொழியை, இன்று செம்மொழி என உயர்நிலையில் வைத்து உலகம் போற்றுகிறது. இச்சிறப்புகள் கொண்ட தமிழ்மொழியை வளர்த்துப் பாதுகாக்கத் தனித்தனியாகவும் குழுக்களாகவும் அமைப்புக்களாகவும் அரசுகளாகவும் தமிழினம் செயற்பட்டு வந்தமையை வரலாறு காட்டும். தமிழையும் தமிழரையும் பழித்தமைக்காக வடநாட்டரசராகிய கனக, விசயன் முடித்தலையில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குப் படிமம் சமைக்கக் கருங்கல்லைச் சுமக்க வைத்தான் சேர மன்னன் செங்குட்டுவன் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சங்க இலக்கியம், அறவிலக்கியம், அருளிலக்கியம், பேரிலக்கியம், சிற்றிலக்கியம், நாட்டார் இலக்கியம், புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என இலக்கிய வகைகள் அலங்கரித்து நிற்கும் தமிழ்மொழியானது இலங்கையிலும் தமிழகத்திலும் சிங்கப்பூரிலும் ஆட்சிமொழியாக உள்ளது. இலங்கையிலும், தமிழகத்திலும் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயிற்று மொழியாகவும் உள்ளது. சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழியும் தமிழர் பண்பாடும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பரவியது. தாய்லாந்து, இந்தோனேசியா, கம்பூச்சியா முதலிய நாடுகளில் தமிழர் கட்டிய கோவில்கள் இன்றும் உள்ளதுடன் சில வழிபாட்டு முறைகளும் பேணப்படுகின்றன.

இரியூனியன், தென்னாபிரிக்கா, கயானா, பிசி, போன்ற நாடுகளுக்கு ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் பணிபுரிவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட தமிழருக்குத் தமிழ் கற்பதற்கு வாய்ப்புக்கள் கிட்டாததால் தமிழ்மொழியை மறந்தவராய்த் தமிழ் மரபுகளைப் பேணுவோராய் மட்டுமே வாழ முடிந்திருக்கின்றது. தற்போது தமிழுணர்வு ஏற்பட்டுத் தன்னார்வ அமைப்புகள் தமிழ்மொழியைக் கற்பிக்க ஆரம்பித்து இருப்பதனால் தமிழைப் பயில முடிகிறது. உலகிற் பரந்து வாழும் அனைத்துத் தமிழருமே தமிழின் சிறப்பினைத் தற்காலத் தொழில்நுட்ப உதவியுடன் அறிந்து கொள்ள முடிந்தாலும் ஒரு நெறிப்படுத்தலின் கீழ் கற்பிப்பதும் கற்பதும் அவசியமானது.

1983ம் ஆண்டின் பின்னர் போர்ச் சூழல் காரணமாக இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து கனடா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே, இத்தாலி, டென்மார்க், நியூசிலாந்து எனப் பல்வேறு நாடுகளில் தமிழர் வாழ்கின்றனர். இந்நாடுகளில் வாழும் தமிழர் தமிழ்மொழிப் பற்றுடன் வாழ்கின்றனர். இவற்றில் சில நாடுகளில் தமிழ்மொழியானது அரச உதவியுடனோ அன்றேல் தனியார் முயற்சியுடனோ கற்பிக்கப்படுகிறது.

கனடாவில் அரச பாடசாலைகளில் மழலை வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ் கற்கும் வாய்ப்புகள் உள்ளன. பல தனியார் நிறுவனங்களும் தமிழ்மொழியைக் கற்பித்து வருகின்றன. பல்பண்பாடுகளைப் பேணுகின்ற கனடா நாட்டில் அவரவர் தத்தம் தாய்மொழியை மதிப்போராய் வாழின் ஏனைய மொழிகளையும் அம்மொழிகளைப் பேசுவோரையும் மதித்து நடப்பர் என்ற கருத்து நிலவுகின்றது. இதனடிப்படையிலும் பலர் தமிழ்மொழியைக் கற்க முன்வருகின்றனர்.

தமிழ்மொழியைக் கற்றுப் பட்டம் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் கனடாவில் உருவாக்கப்பட்டுப் பலர் பட்டதாரிகளாகி உள்ளனர். இத்தகைய வாய்ப்புகளை வழங்கும் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கனடா வளாகமும் திகழ்கிறது. இவ்வளாகம் தமிழ்மொழியை மட்டுமன்றி இசை, நடனம், மிருதங்கம், யோகா எனத் தமிழோடு இணைந்த கலைகளையும் கற்பித்து ஆரோக்கியமான சமூகம் உருவாக உழைக்கிறது என்பது மகிழ்சிக்குரிய விடயம்.. இவ்வளாகம் மேலும் பல துறைகளில் மக்கள் தேர்ச்சி பெறும் வகையில் விரிவு பெற்றுத் தமிழ் மணம் பரப்ப இறையருள் கிடைக்கட்டும்.

எங்கும் என்றும் வளர்ப்போம் எம்மினிய தமிழை!





# அண்ணாமலைக் கனடா வளாகத்தில் என் அனுபவம்

கார்த்திகா மகாதேவன், இளங்கலை இறுதியாண்டு

சிறுவயதில் இருந்தே எனக்குத் தமிழ் மொழியில் உள்ள ஆர்வத்தை அறிந்து அதனை ஊக்குவிப்பதற்கு எனது தாயார், அம்புலிமாமா, சித்திரக்கதைகள், பஞ்சதந்திரக்கதைகள் முதலான பல நூல்களை வாங்கித் தந்து எனது வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தினார். அதுமட்டுமல்லாது என்னுடைய ஆரம்பக்கல்விப் பாடசாலை அதிபரும் தமிழ் ஆசிரியருமான அமரர் திரு அப்புகாமி அவர்கள் எனக்கு அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் பங்கு பெறுவதற்கு வாய்ப்பும் ஊக்கமும் அளித்தமையை ஈண்டு நினைவிற் கொள்கிறேன். உலகில் தோன்றிய பழம்பெரும் நாகரீகங்கள் பற்றி வரலாறு கற்பித்த ஆசிரியர், கற்பிக்கும் போது சிந்து வெளிநாகரிகம் பற்றியும், அங்கு புதைபொருளாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட பண்டைத் தமிழருடைய வரலாற்றுச் சான்றுகள் பற்றியும் எடுத்துரைத்தார். இந்நிலையில் ஈழப்போர் உச்சிக்கட்டத்தை அடைந்தது. உயிர் இழப்புக்களும் சொத்திழப்புக்களும் இடம்பெறவே, எம் மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அவர்களைப் போன்று நானும் என் குடும்பத்தினரும் கனடாவில் புகலிடம் அடைந்தோம். இந்நிகழ்வு என்னுள் ஆழ்ந்த வலியை ஏற்படுத்தியதுடன், எம் வரலாற்றை அறிய வேண்டும் என்ற என் ஆவலைத் தூண்டியதுடன் அது தொடர்பான எனது தேடலையும் விரைவு படுத்தியது. இணையத்தளங்களின் ஊடாகவும் நூல்களின் வாயிலாகவும் எம் வரலாற்றினையும் மூவேந்தர் பற்றிய செய்திகளையும் தேடிக் கற்றுவந்தேன். இதனை அறிந்து என் குடும்பத்தவரும் எனக்குச் சாண்டில்யன், கல்கி, அகிலன் போன்ற பெரும் எழுத்தாளர்களின் சரித்திர நாவல்கள் பற்றி எடுத்துரைத்து, அந்நூல்களை வாங்கித் தந்து என்னை ஊக்குவித்தனர்.

தமிழ் மொழியைக் கற்க வேண்டும் எனும் ஆர்வத்தில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தை அணுகினேன். அப்போது எனக்கு கொடுக்கப்பட்டிருந்த நேர்காணலின் போது என்னுடைய தமிழ் மொழியின் ஆர்வத்தை அறிந்து தமிழிற் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம் என்னும் ஆலோசனை வழங்கப்பட்டது. நானும் அந்த ஆலோசனையை ஏற்று அதற்கான தேடலில் இறங்கினேன். இரண்டு வருடத் தேடலின் பின் என்னுடைய குடும்பத்துக்கு நெருங்கிய ஒருவர் தாம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகத்தில் நட்டுவாங்கம் கற்பதாகவும் என்னையும் அங்கே தொடர்பு கொண்டு உரையாடுமாறும் கூறினார். நானும் வளாகப் பொறுப்பாளராக இருந்த திரு. கஜன் அவர்களுடன் தொடர்பு கொண்டு தமிழிற் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு வேண்டிய ஆவணங்களுடன் இளங்கலைமானிப்பட்டக் கற்கைநெறியில் என்னைப் பதிவுசெய்துகொண்டேன். தமிழ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டபோது தமிழில் அடிப்படை கூடத் தெரியாத நிலையில் என்னால் எவ்வாறு பட்டப்படிப்புக் கல்வியிற் சித்தியடைய முடியும் எனும் ஐயம் எழுந்தது. எனெனில் என்னுடைய தமிழ்க் கல்வி இலங்கையில் எட்டாம் வகுப்புவரை மட்டுமே முடிவுற்றிருந்தது. இருப்பினும் என்னுடைய தாயார் என்னால் முடியும் என்று கூறி எனக்குப் பக்கபலமாக நின்று தன்னம்பிக்கை ஊட்டினார்.

இவ்வளாகத்தில் தமிழ் கற்பித்த ஆசிரியர்களும் எனக்காக வகுப்பு நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களிலும் எனக்கு பல்வேறு விடயங்களை எடுத்துக்கூறி என்னை ஊக்குவித்து வந்தனர். இவர்களிற் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் வழிகாட்டுதல் பற்றி முதலிற் குறிப்பிடுதல் வேண்டும். அவர் எமக்குக் கற்பிக்கும்போது சுவாரசியமாக வரலாற்றுத் தகவல்களையும் குட்டிக்கதைகளையும் பாடம் பற்றிய தம்முடைய வாழ்க்கையில் நடந்த சில நிகழ்வுகளையும் எம் மனதில் பதியும் வண்ணம் கூறுவார். என்னுடைய சிற்றறிவுக்கு எட்டும் வண்ணம் எமது தரம் அறிந்து, மாணாக்கராகிய எம்முடைய நிலையில் இருந்து கற்பிப்பார். கற்பித்த பாடத்தை மீள்பார்வை செய்யும்போது அவர் கூறிய அச்சுவாரசியமாகக் கூறும் தகல்களைக் கொண்டு அப்பாடத்தைப் பசுமரத்தில் ஆணி பதிவது போன்று நினைவில் வைத்துக்கொள்வேன். பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் கற்பிப்பதற்குக் கையாண்ட உத்திமுறை தேர்வுக் காலங்களில் எனக்குப் பெரிதும் உதவியாக அமைந்திருந்தது. முதலாம் ஆண்டு திருமதி சிறிதாஸ் அவர்கள் எங்களுக்கு இலக்கணம் கற்பிக்கும்போது எவ்வாறு வாக்கியம் அமைக்க வேண்டும் என்பது பற்றி எடுத்துரைத்தார். அதுமட்டுமல்லாது சிறுகுறிப்பும் கட்டுரையும் எழுதச் சொல்லுவார். அவ்வாறு நான் எழுதிக் கொடுத்தவற்றைத் திருத்தி அவற்றிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி என்னைத் திருப்பித் திருப்பி எழுதுமாறு ஊக்குவித்தார்.

'செந்தமிழும் நாப்பழக்கம்' எனும் கூற்றுக்கு அமைய இலக்கணப் பிழைகளும் குறையலாயின. இருப்பினும் கட்டுரை எழுதுவது என்பது எனக்குக் கடினமான ஒரு விடயமாகவே இருந்து வந்தது. பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்களிடம் இது பற்றிக் கூறியபோது அவர் கட்டுரை எழுதி வருமாறு கூறினார். இருப்பினும் என்னுடைய தயக்கத்தை அறிந்து அவரே கட்டுரைத் தலைப்பைக் கொடுத்து அதற்கு எவ்வாறு எழுதுவது என்று கற்பித்துக் கொடுத்தார்.

உதாரணமாக ஒவ்வொரு பந்தியையும் எவ்வாறு அமைக்க வேண்டும், எவ்வாறு தொடர் பந்திகளை அமைக்க வேண்டும், எடுத்துக்கொண்ட பொருளை எவ்வாறு நிறைவு செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல்களைத் தந்து கட்டுரை எழுதச் செய்தார். அதுமட்டுமல்லாது பாடத்திட்டம் தவிர்ந்த பல்வேறு நூல்கள் பற்றியும் அவற்றில் இருந்து பல தகவல்களையும் எமக்குக் கூறி எம்முடைய தமிழ் சார்ந்த அறிவை விரிவுபடுத்தினார். தேர்வுக் காலத்தில் எமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்தை எவ்வாறு கையாளலாம் என்றும் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களை எவ்வாறு அணுகலாம் எனறும் எமக்கு எடுத்துரைப்பார்.

ஆசிரியர்கள் என் மீது வைத்திருந்த நம்பிக்கையும் ஊக்கமும் அவர்கள் கொடுத்த ஆதரவும் என்னால் முதலாம் பிரிவில் சித்தியடைவேன் என்ற துணிவைக் கொடுத்தன. அவையே நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைய வைத்தன. அனைவரின் ஆசியோடு தொடர்ந்தும் முதுகலைமானி, முனைவர் கற்கைநெறிகளையும் மேற்கொள்ள விருப்புக் கொண்டுள்ளேன்.

பன்மொழிப் பண்பாடு கொண்ட கனடா நாட்டில் எமது கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்தெடுப்பதற்கும் எம்மொழி அழிந்துபோகாமற் பேணிக் காப்பதற்கும் அடுத்த தலைமுறைக்கு இவை அனைத்தையும் எடுத்துச் செல்வதற்கும் ஆங்கிலம் போன்று தமிழும் அவசியமாகும். ஆகையால் என்னைப் போன்று மற்றைய மாணவரும் கட்டாயம் தமிழ் கற்றுப் பட்டம் பெறுவதற்கு வாய்பாகவும் வசதியாகவும் எம் மத்தியிலுள்ள நிறுவனம் கனடா அண்ணாமலை வளாகத்தில் கல்வியைத் தொடரலாம் என்பதை உறுதியாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்

புஷ்பா கிறிஸ்ரி, எம். ஏ.

சிறு வயதிலிருந்தே இந்த வார்த்தைகள் என் காதுகளை நிறைத்துஇ எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகிவிட்டது. 'கற்றது கையளவு கல்லாதது கடலளவு' எனக்கூறுவார்கள். வாசிப்பும் தேடலும் விரிய விரியத்தான் நாங்கள் எவ்வளவு சிறுமையானவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு குழந்தையின் முதலாவது ஆசிரியர் தாய்தான். கருவிலே வளரும் சிசுவினுடைய கிரகிக்கும் திறன் அதனுடைய ஏழாவது மாதங்களிலிருந்தே வளர்ச்சியடையத் தொடங்குவதை விஞ்ஞானம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியரும் தமது பிள்ளைகளை – மாணவர்களைச சிறந்த வாசகர்களாக உருவாக்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை சிறுவயதிலிருந்தே ஊக்குவிக்க வேண்டும். எல்லா மனிதர்களிடமும் அது ஒரு பண்பாக வளர வேண்டும். எந்தவொரு மனிதருக்கும் முதல் நண்பராக அவரது வாசிப்பே அமைய வேண்டும்.

இன்றைய காலகட்டத்து ஆரம்பப் பாடசாலைகளில் பணியாற்றும் சந்தர்ப்பம் கிட்டியது.. தினமும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு கதைப்புத்தகம் வீட்டிற்குத் தரப்படும். அதை அவன் அன்றிரவு படித்து விட்டு மறுநாள் வேறு ஒரு புத்தகத்தை மாற்றி எடுத்துச் செல்வான். இப்படி சிறு வயதில் சில பிள்ளைகள் வாசிக்கும் பழக்கத்தைப் கொள்கின்றார்கள். ஆனால் அதில் எத்தனை பேர்கள் அதனைத் தொடர்ந்து தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்கின்றனர்? வீடுகளில் பெற்றோர் வாசிப்பவர்களாக இருந்தால் அவர்களும் வாசிக்கலாம். இல்லையோ அவர்கள் நிலை பரிதாபமே!

நாம் சிலரை அவதானிக்கின்றபோது கையில் கிடைக்கின்ற எந்த கிழிந்த கசங்கிய பத்திரிகைத் துண்டையும் கூட ஒரு தடவை படித்த பின்புதான் தூக்கிப் போடுவார்கள். சிலர் தம்மோடு எப்போதுமே ஒரு புத்தகத்தைக் கொண்டு திரிவார்கள். சமூகத்திற்குப் பெறுமதியான அறிவுசார் சேவைகளை ஆற்றிய பலரும் சிறந்த வாசகர்களாகவே இருந்துள்ளனர். இந்தியப் போராட்ட வீரர் பகத்சிங் தன்னைத் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லும் கடைசி நிமிடம் வரை வாசித்துக் கொண்டேயிருந்தார்.

